# காலைப் பிறை

பிரபல ஆங்கில ஆசிரியர்
எப். டபிள்யூ. பெயின்
எழுதியது

ஆசிரியர் அனுமதியுடன்
கி. சாவித்திரி அம்மாள்
மொழிபெயர்த்தது

பதிப்புரிமை] கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. [விலை ரூ. 1/4

முதற்பதிப்பு — 1942
ஐந்தாம் பதிப்பு — 1947

Printed at THYAGI PRESS, Triplicane, Madras
and published by
KALAIMAGAL KARYALAYAM, Mylapore, Madras.
Paper issue card No. MS. 76. 5-3-47

# முகவுரை

தமிழில் எழுத்தாளர் பலர் மலிந்த இந்தக் காலத்தி லும் பலரிடம் ஒரு குறை இருக்கிறது. ஆங்கில அறிவு படைத்து எழுதும் பல எழுத்தாளர்கள் தம்மை அறியா மலே ஆங்கில அமைப்புக்களைத் தம் எழுத்தில் புகச் செய்துவிடுகிருர்கள். தமிழ் மரபுக்கு மாருன வாக்கியங் களையும் கருத்துக்களையும் அவர்களுடைய கதைகளிலும் கட்டுரைகளிலும் பார்க்கலாம்.

ஆனல் ஓர் ஆங்கிலேயர் இந்திய நாட்டுக் கதை யைப்போல ஒன்றைச் சிருஷ்டித்து, அதனை ஒரு பழைய ஸம்ஸ்கிருதக் கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பென்று தோற்றும்படி செய்வதென்ருல் அது மிகவும் ஆச்சரியப் படத்தக்க விஷயம். அந்த ஆச்சரியமான முயற்சியைச் செய்து வெற்றி பெற்றவர் ஸ்ரீ எப். டபிள்யூ. பெயின். அவர் ஏறக்குறையப் பதின்மூன்று கதைகள் இந்த முறை யில் எழுதியிருக்கிருர்.

நம்முடைய தேசத்தில் கதைகள் சொல்வதும், அந்தக் கதைகளினிடையே பல நீதிகளைச் சொல்வதும், அந்த நீதிகளுக்கு ஏற்ற உபகதைகளைச் சொல்வதும் நெடுங்காலமாக வந்த வழக்கங்கள். பஞ்சதந்திரம், விக்கிர மாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை முதலிய கதை களின் போக்கே ஒரு தனிக் கவர்ச்சியை யுடையது. அந்தப் போக்கை நன்ருக உணர்ந்து அதில் கொஞ்ச நஞ்சம் குறைபாடு இருந்தாலும் அதனைப் போக்கிக் கதை களை இவர் எழுதியிருக்கிருர். இவர் இந்திய நாட்டுக் காவியங்களை நன்ருகப் படித்து ரஸித்து ஊறினவர் என்றே தோற்றுகிறது. இல்லையாஞல் இவர் கதைக ளில் உள்ள வருணனைகளும் உபமானங்களும் இவ்வளவு பொருத்தமாக அமைந்திரா.

"சிலந்திக்கு வலை பின்னவும், தேனீக்குத் தேன் சேர்க்கவும், தாமரைக்கு மலரவும் யார் கற்றுக்கொடுத்தனர்? யானைக்கு அதன் அறிவை அளித்த பிரமன் ஸ்திரீகளுக்கு மட்டும் அவர்களுக்குரிய சக்தியை அளிக்காமற் போவாரோ?"

"குளத்திலுள்ள தாமரை மலர்கள் யாவும் நாயகனை கதிரவனை வரவேற்பதற்கு ஸித்தமாய் இருப்பன போன்று விளங்கின."

"அவ்விடத்தில் விருக்ஷங்கள் எப்பொழுதும் மது மயக்கமேறிய வண்டுகளின் ரீங்காரத் துவனியுடன் கூடிய புஷ்பங்கள் நிறைந்தனவாகவே இருக்கின்றன.... இரவிலே சந்திரகிரணங்களின் ஸ்பரிசத்தினால் சந்திரகாந்தக் கற்கள் அமிருதத்தைப் பெருக விடுகின்றன."

இவை இந்தியக் கவிஞருடைய வருணனைகளிலும் உவமைகளிலும் ஊறிப்போன உள்ளத்திலிருந்துதான் பிறக்க முடியும்.

தாமரையின் மலர்ச்சியையும், வண்டுகளின் ரீங்காரத்தையும், மான்களின் மென்மையையும், நிலவொளியின் சோபையையும் பாரத பூமியிலே அனுபவித்தவர்களுக்கு அவை ஜலப்பிராயமாகக் கவிதையிலே மலர்கின்றன. இந்தியாவிலே பல வருஷங்கள் இருந்த இந்த வெள்ளைக்காரர் அவற்றை நேரே பார்த்து ஓரளவு அனுபவித்தாலும், இந்தியக் கவிஞருடைய கற்பனுலோகத்திலே கண்டு அனுபவித்து அதன் பயனாகவே இங்ஙனம் எழுதுகிறார்.

கதையில் பெரிய நிகழ்ச்சிகள் ஒன்றும் இல்லை. இரண்டே பாத்திரங்கள். பெண்கள்பால் வெறுப்புற்ற ஓர் அரசன் தவக்கோலத்தோடு சிவாலயத்தில் இருக்கிறான். அவனை மணப்பதற்காகச் சென்ற ராஜகுமாரி மதுபஞ்சரி அவனிடம் சேடியைப் போல அணுகி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மலரைக் கொடுத்துக் கதை சொல்லி அவன் மனத்தைக் கவர்கிறாள்.

அரசன் அவளுடைய அழகிலும், பேச்சிலும், சாதுரியத்திலும் ஈடுபடுகிறான். அவன் மனம் அணு அணுவாக மாறுகிறது. அப்படி மாறுவது விந்தையல்ல. அவள் மாற்றுவதுதான் பெரிய விந்தை. அவள் பேசும் பேச்சிலே அவன் நிச்சயமாக மாறத்தான் வேண்டும், வேறு வழியில்லை என்றே நமக்குப் படுகிறது.

அவள் அவனைத் தன் வசப்படுத்தி, பாம்பாட்டியைப் போல் தந்திர சாமர்த்தியங்களால் தான் ஆட்டும்படியெல்லாம் அவனை ஆடும்படி செய்கிறாள்;' அவன் உள்ள நிலை தெரிந்து வதக்கி எடுக்கிறாள். தனிமையை விரும்பி நின்ற அரசன் சிறிது சிறிதாக அரச குமாரியை நெருங்குகிறான்; "ஜலத்தில் நீ தவறி விழுந்துவிடாமல் இருக்கும் வண்ணம் நான் உன்னைத் தாங்கிக் கொள்ளுகிறேன். நீயே அத்தாமரையைப் பறித்துக்கொள்" என்று சொல்லும் நிலைக்கு அரசனைக் கொண்டுவந்துவிடுகிறாள் மதுப மஞ்சரி

அவளுடைய பேச்சினிடையே வரும் கதைகள் நறுக்குத் தெறித்தாற்போல அழகாகவும் சுருக்கமாகவும் இருக்கின்றன. பழங்காலத்துக் கதைகளில் வரும் உபகதைகளுக்கும் உபமானங்களுக்கும் நீதிகளுக்கும் இதில் உள்ளவற்றிற்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அவைகளில் வாசகர்களுடைய பொறுமையைச் சோதிக்கும் அளவுக்கு வருணனைகள் நீண்டிருக்கும். சொன்ன உபமானமே திருப்பித் திருப்பி வரும்: அடிக்கு ஒரு நீதி வந்து குறுக்கே நிற்கும். இப்படி இல்லாமல் எந்த அளவில் உபயோகித்தால் அவை ரஸத்தப்பாக இராவோ அந்த அளவில் ஆசிரியர் இதில் அமைத்திருக்கிறார். அவர் மேல்நாட்டாராக இருத்தலின் இந்தத் திறமை அவருக்கு இயற்கையாகவே அமைந்திருக்கிறது.

ஆங்கிலத்தில் இந்தக் கதையை வாசிப்பதை விடத் தமிழில் வாசித்தால் ஒரு புது நயத்தை உணர்கிறோம்.

கதையும் கருத்துக்களும் இந்திய நாட்டுக்குச் சொந்த மானவை. ஆகையால் இந்திய நாட்டுப் பாஷையில் அவற்றை நன்றாகச் சொல்ல முடியும். ஸ்ரீமதி சாவித்திரி அம்மாளது மொழிபெயர்ப்பில் இந்த இயற்கையோட்டம் இருக்கிறது. இந்தத் தமிழ்ப் புஸ்தகத்தைப் படித்து விட்டுப் பிறகு இங்கிலீஷ் புஸ்தகத்தைப் படித்தால் அது இதன் மொழிபெயர்ப்பென்றுதான் தோற்றும்.

தம்முடைய நூல்களை மொழிபெயர்க்கும் உரிமையை ஸ்ரீ பெயின் ஸ்ரீமதி சாவித்திரி அம்மாளுக்கு வழங்கியிருக்கிறார். இந்தக் கதை முதலில் கலைமகளில் வெளி வந்தது

ஸ்ரீ எப். டபின்யூ. பெயின் இப்போது இல்லை. தாம் ரஸித்த காளிதாஸனோடும் பவபூதியோடும் உறவாடுவதற்குப் போய்விட்டார்.

அவர் நூல்களை ஒவ்வொன்றாக வெளியிடும் நோக்கம் கலைமகள் காரியாலயத்திற்கு இருக்கிறது. தமிழ்நாட்டினர் அவற்றை வரவேற்பார்களென்றே நம்புகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அரசன் விடுத்த தூது | .... | 1 |
| 2. | மாம் பூ | .... | 11 |
| 3. | பாதிரிப் பூ | .... | 16 |
| 4. | மல்லிகை | .... | 21 |
| 5. | மலரற்ற நாள் | .... | 27 |
| 6. | சம்பகம் | .... | 31 |
| 7. | தாமரை | .... | 38 |
| 8. | ஸ்ரீபலம் | .... | 43 |
| 9. | சிரீஷ புஷ்பம் | .... | 47 |
| 10. | கதம்பம் | .... | 51 |
| 11. | குரவகம் | .... | 57 |
| 12. | அசோக மலர் | .... | 62 |
| 13. | பலாச புஷ்பம் | .... | 67 |
| 14. | சமீ புஷ்பம் | .... | 73 |

# காலைப் பிறை

## அத்தியாயம் 1

### அரசன் விடுத்த தூது

முன் ஒரு காலத்தில் மூடமூடனை ஓர் அரசன் இருந்தான். இருவர் அவ்வரசனைக் கத்தி முனையில் இருப்பவனைப் போன்று அல்லும் பகலும் தூக்கம் இல்லாமற் செய்தனர். அவர்கள் யாவரெனில் பராக்கிரமசாலியான அவனுடைய சத்துருவும் எழில் மிகுந்த அவன் புதல்வியுமே. பகைவனோ போரில் வெல்லக்கூடாதவன். புத்திரியோ அதிபுத்திசாலி. அந்தப் பகையரசனுக்கு இன்னும் இளம்பருவம் நீங்கவில்லை. மூட அரசன் மகளும் மணமாகாத கன்னிகையாகவே இருந்தனள். என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கிய அவ்வரசனுக்கு, வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவில் தூக்கம் இல்லாமல் படுத்திருக்கும்பொழுது ஒரு யோசனை தோன்றிற்று: 'ஆஹா! இவ்வமுதத்தையும் அவ்விஷத்தையும் கலந்துவிடுவதுதான் சரி. என் புத்திரியின் லாவண்யப் பிரவாகத்தைக் கொண்டு என் பகைவனின் விரோத நெருப்பை அணைத்து

விடுகிறேன். அதனால் என் ராஜ்யத்துக்கு க்ஷேம மும், என் மனத்திற்கு அமைதியும், புத்திரிக்குக் கணவனும் கிட்டியதாகும்.'

இவ்வருமையான யோசனை உதித்ததும் அவன் ஆனந்த மிகுதியினால் கூச்சலிட்டான். அதைக் கேட்டு ஏதோ ஆபத்தென்று விளக்கு களுடன் உள்ளே ஓடிவந்த காவலாளிகள் அலங் கோலமான ஆடையுடன் கையையும் காலையும் ஆட்டியவண்ணம் அரசன் தனக்குத் தானே ஏதோ உளறிக்கொண்டு அறையில் இங்குமங்கும் நடந்துகொண் டிருப்பதைக் கண்டனர். 'சரி தான். கொஞ்சநஞ்சம் இருந்த புத்தியும் சிதறிப் போய்ப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று அவர்கள் திகைத்தனர். ஆனால் அரசனோ ஆடல் பாடல்களுடன் இரவைக் கழித்துப் பொழுது விடிவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

பொழுது புலர்ந்ததும் அரசன் ஒரு தூதனைத் தேர்ந்து அழைத்துப் பின்வரும் செய்தியுடன் தன் பகைவனிடம் அனுப்பினான் :

" நம்மிடையேயுள்ள பகையை ஒழித்து நாம் இருவரும் இனி நண்பர்களாய் அரசு புரிவோம். பதிலாக ஒன்றும் கோராமல் என் புதல்வியை உனக்கு அளிக்கிறேன் ; மணம் புரிந்துகொள். நான் அளிக்கும் இப்பரிசின் சிறப்பைப்பற்றி இப்பொழுது நான் கூறினால் உனக்கு மிகை யாகவே தோற்றும். நீயே பிறகு அறிந்துகொள் வாய்."

தூதன் அரசனைப் பணிந்து தனக்கு இட்ட கட்டளையை மேற்கொண்டு சென்றான். ராஜ குமாரியின் செவியில் இச்செய்தி எட்டிற்று. தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் கணவனைப் பற்றிய விவரங்களை அறிந்துவரும் பொருட்டுத் தன் அந்தரங்க ஆட்களில் சிலரைத் தந்தைக்குத் தெரியாமல் அவள் அனுப்பினாள்.

சில நாட்கள் சென்றன. சென்ற தூதன் இன்னும் திரும்பி வரவில்லை. அவனை எதிர் பார்த்திருந்த அரசனுக்கோ நாட்கள் செல்லச் செல்ல அவசரமும் ஆத்திரமும் அதிகரித்தன. ஒரு நாள் மன்னன் தன் மகளுடன் வீற்றிருக்கும் பொழுது வாயிற்காப்போன் ஓடிவந்து, அரசன் காலில் விழுந்து, "சென்ற தூதன் திரும்பி வந்து விட்டான். மகாராஜாவின் கட்டளை எதுவோ?" என்றான். அவனை உடனே அழைத்துவரும்படி அரசன் ஆக்ஞாபித்தான். பிரயாணத்தினால் மாசு படிந்த மேனியும் ஆடையும் உடைய தூதனைக் கோபத்தினால் சிவந்த கண்களுடன் நோக்கி, "ராஜாவினது ஆக்ஞையை உடனே செய்து முடிக்காமல் இளமை நீங்கி முதியவனாகும் வரை தாமதிக்கும் தூதனுக்கு என்ன தண்டனை விதிப்பது?" என்றான் கடுமையாய்.

தூதன் சிரமேற் கைகுவித்து நின்று பதில் கூறலானான்: "மன்னர் மன்னவ, நிரபராதி கள் மீது கோபிக்க வேண்டாம். மாரிக் காலத்தில் காதலியின் பிரிவாற்றாது ஏங்கி

விரைந்து வரும் காதலனைக் காட்டிலும் கடுகியே யான் சென்று வந்தேன். இவ்வளவு தாமதத்திற்கும் தாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் மருமகனுடைய விசித்திரச் செய்கையே காரணமாகும். சில காலத்திற்கு முன்பு அவர் தமக்கு விரோதமாய்க் கிளம்பிய ஒரு சிற்றரசனை யுத்தத்தில் வென்று, திடீரென்று ஊருக்குத் திரும்பி அரண்மனைக்குள் பிரவேசித்தாராம். அச்சமயம் அவருடைய ஒரே பட்ட மகிஷியானவள் ரகசியமாய்ப் பெண் உடையில் அரண்மனைக்குள் அழைத்துவரப்பட்ட தன் இஷ்டநாயகனுடன் பேசிக்கொண்டு இருந்ததைப் பார்த்துவிட்டாராம். உடனே, 'சீ என்ன உலகம்!' என்று எல்லாவற்றிலும், முக்கியமாய் ஸ்திரீகள்மீது மிக்க வெறுப்புத் தோன்றவே, அம்மன்னர் அவ்வரசியை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டுத் தம் ராஜபதவி, போகங்கள் யாவற்றையும் பாம்பு சட்டை உரிப்பதுபோல் களைந்தவராய் நகரெல்லையிலுள்ள வனத்தில் ஒரு தாமரைத் தடாகத்தின் அருகில் இருக்கும் பாழடைந்த சிவாலயம் ஒன்றில் சென்று வசித்துக்கொண்டிருக்கிறார். அங்கே அவர் ஒருவரையும் பார்ப்பதுமில்லை; பேசுவதுமில்லை. முக்கியமான ராஜீய விஷயங்களிலுங்கூட அவரைக் கண்டு பேசுவது அவருடைய மந்திரி பிரதானிகளுக்கே சிரமமாய் இருக்கிறது. என் வருகையையும் செய்தியையும் அறிவிப்பதற்கே எவ்வளவோ காலமாகிவிட்டது. கடைசி

யாய் மன்னரைப் பார்க்க அனுமதி கிடைத்தது. ஒரு நாள் அதிகாலை நான் அவர் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அரசர் வரவை எதிர்பார்த்து நின்றிருக்கும் பொழுது குளத்திலுள்ள தாமரை மொட்டுக்கள் இளஞ் சூரியனின் கதிர்கள் பட்டு ஒன்றன்பின் ஒன்றாய் மலருவதைக் கண்டேன். அதே சமயத்தில் அவ் விள மன்னரும் ஆலயத்துக்கு வெளியே குளத்துப் படியில் வந்து நின்றார். அவர் அணிந்திருந்த சிவந்த மரவுரியானது சூரியனது ஒளியில் தழல்போல் பிரகாசிக்க, அவர் நிகரற்ற ஒரு மாணிக்கமென விளங்கினார். ராஜ சிரேஷ்டரான அவரைக் கண்டு அதிசயித்து நிற்கும் என்னை நோக்கிக் கம்பீரமான தொனியில் அவர் கூறியதாவது: 'தூதனே! போ. இருவருடைய ராஜ்யங்களின் க்ஷேமத்திற்காகவும் நான் உன் அரசர் கூறுவதற்குச் சம்மதிப்பதாகச் சொல். நான் அவருடைய புத்திரியை மணம் புரிந்துகொள்வதனால் நமக்குள் இருந்த பகைமை நீங்கி நட்பும் சமாதானமும் ஏற்படட்டும். என் மகிஷியாய் இருப்பதற்குரிய சகல மரியாதைகளையும் நான் அந்த ராஜகுமாரிக்குச் செய்வேன். ஆனால் என் மனைவியாய் மட்டும் அவளைப் பாவிக்க முடியாது. எங்கள் இருவருக்கும் அக்கினி சாக்ஷியாய் மணம் முடிந்ததும் அவள் தன் அரண்மனைக்கே திரும்பிச் சென்று என்னை மறந்து வசிக்கட்டும்.' "

தூதன் இவ்வாறு கூறி வருகையில் கோபம் மூண்ட அரசன், "பேஷ்! வெகு நன்ருயிருக்கிறது. நம்மையும் நம் புத்திரியையும் அவமானப்படுத்துவதன் பொருட்டுக் கூறிய வார்த்தையோ இது?" என்ருன்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராஜகுமாரி இதைக் கேட்டுச் சிரித்து, "தந்தையே, இதென்ன? இவ்வளவு வயதாகியும் உங்களுக்கு உலகம் இன்னதென்று தெரியவில்லையே! ஸ்திரீ புருஷர்களின் தொடர்பு, ராஜ்யதந்திரம் இவைகளை அறியாமல் இருப்பதுடன் என்னைப்பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லையே!" என்ருள்.

"ஆஹா! உனக்குப் பதினறு வயது நிரம்பவில்லை. இதற்குள் நீ என்ன என்னவெல்லாமோ தெரிந்துகொண்டு விட்டாயா? சொல், பார்ப்போம்" என்ருன் அரசன்.

ராஜகுமாரி, "நீங்கள் விரும்பியபடியே இப்பொழுது எல்லாம் முடிந்திருக்கின்றன. ஆயினும் நீங்கள் மருமகனுடைய சொல்லை ஏற்காமல் நமக்கு ஏற்பட இருக்கும் நன்மையைக் கெடுக்கப் பார்க்கிறீர்கள்" என்ருள்.

"இது தீமையையல்லாமல் எவ்வாறு நன்மையை அளிக்கும்? உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள இசையாமல் இருக்கும் ஒருவனுக்கு எப்படி உன்னை மணம் புரிவிப்பது? அப்படியிருந்தும் நீ ஏதோ நான் அறியாதவன் என்று பேசுகிருயே!"

அதைக் கேட்டு, ராஜகுமாரி பிதாவின்முன் கோபத்துடன் கைகளைக் கட்டிக் காலைத் தரையில் உதைத்துக்கொண்டாள். அப்பொழுது அவள் கையில் அணிந்திருந்த வளையல்கள் கலகலவென்று ஒலிக்கக் காலில் அணிந்திருந்த செம்பஞ்சுக் குழம்பின் அடையாளம் பூமியில் பதிந்தது. பாதச் சிலம்புகள் ஒன்றோடொன்று பட்டுச் சப்தித்தன.

ராஜகுமாரி, "தந்தையே, ராஜ்ய தந்திரம் சிறிதாவது தாங்கள் அறிந்தவராய் இருந்தால் இவ்வாறு கோபத்திற்கு ஆளாகி எவ்விதத்திலும் நன்மை அளிக்கக்கூடியதொரு சிறந்த சம்பந்தத்தை இழக்க முயலுவீரோ? அல்லது ஆடவர்களைப்பற்றித்தான் அறிந்திருந்தால், என் கணவர் புருஷ சிம்மம் போன்றவர்; தங்களுக்கு அனுப்பியிருக்கும் பதிலிலிருந்தே அவர் என்னை மனைவியாகப் பெற்றுத் தங்களுக்கு மருமகனாவதற்கு ஏற்றவர் என்பதை அறியீரோ? அல்லது ஸ்திரீகளைப்பற்றி அறிந்திருந்தாலும் ஒருவன் தன் ஆயுள் முழுவதும் பெண்ணின்பத்தை நுகராமலே கழித்துவிடலாம் என்பதும், ஒரு தடவை நுகர்ந்து பார்த்தவன் பிறகு தேவாசுரர்கள் குறுக்கே நின்றபோதிலும் அதை மீண்டும் பெற முயலுவான் என்பதும் தெரியாமல் இருக்குமா? தாங்கள் என்னைப்பற்றியும் அறிந்துகொள்ளவில்லையென்றே நினைக்கிறேன். அறிந்திருந்தால் எவ்விதமான நிபந்தனையானாலும் சம்மதித்து

நான் அவரை மணம் புரிந்து கொள்வதாயிருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். அவரை என் வசப்படுத்தி, பாம்பாட்டியைப் போல் என் தந்திர சாமர்த்தியங்களினால் நான் ஆட்டும்படியெல்லாம் அவரை ஆடும்படி செய்து விடுவேன். கணவனைத் தன் வழிக்குக் கொண்டு வராதவளும் ஒரு பெண்ணோ?" என்றாள்.

அதற்கு அரசன், "மகளே, நீ ஒரு மகா பண்டிதை போலத்தான் பேசுகிறாய். இச்சிறு வயதில் உனக்கு இத்தகைய அறிவு எவ்வாறு கிட்டிற்றோ தெரியவில்லை. ஆயினும் நீ இன்னும் இளஞ் சிறுமியே யாகையால் கணவனை வசியம் செய்யும் உபாயங்களில் எவ்வாறு தேர்ந்திருக்க முடியும்?" என்றான்.

ராஜகுமாரி இதைக் கேட்டதும் கலகல வென்று நகைத்துச் சொல்வாள்: "தந்தையே, உண்மையில் தாங்கள் என் தந்தையாய் இருந்தால் இவ்விதம் பேசமாட்டீர்கள். மங்கையர்களுக்கு இயற்கையாய் இருக்கும் இச்சாமர்த்தியமானது வயதாலும் அனுபவத்தாலும் ஏற்படுவதன்று. அதற்கு மாறாக வயதானால் அது குறைந்து போகுமென்றே கூறலாம். சிலந்திக்கு வலை பின்னவும், தேனீக்குத் தேன் சேர்க்கவும், தாமரைக்கு மலரவும் யார் கற்றுக் கொடுத்தனர்? யானைக்கு அதன் அறிவை அளித்த பிரமன் ஸ்திரீகளுக்கு மட்டும் அவர்களுக்குரிய சக்தியை அளிக்காமற் போவானோ?

இவ்விஷயத்தில் ஐயம் பெறும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். தூதனை அனுப்பி நாம் சம்மதிப்பதாய் அவ்வரசருக்குத் தெரிவியுங்கள். என்னையும் கூடிய சீக்கிரத்தில் அங்கே அனுப்பிவிடலாம். நீங்கள் அனுப்பும் தூதனிடம் நானும் ஒரு செய்தி சொல்லி அனுப்புவேன்."

புத்திரியின் மேலுள்ள வாஞ்சையினாலும் தன் புத்திக் குறைவினாலும் அவளைத் தடுத்துக் கூறமாட்டாதவனாய் அவ்வரசன் தன் மகள் கூறியதற்கு இசைந்தான். பிறகு மருமகனுக்குப் பின்வரும் செய்தி அனுப்பினான்: "நீ கூறும் நிபந்தனைகளுக்கு இசைந்து அமாவாசைத் தினத்தன்று என் குமாரியைப் பரிஜனங்களுடன் அனுப்புகிறேன். உனக்கு நற்புத்தியும் மங்களமும் உண்டாகுக!"

தூதன் புறப்படும் சமயம் ராஜகுமாரி, "நான் கூறும் இம்மொழிகளையும் என் கணவரிடம் தெரிவிப்பாயாக; ஜாக்கிரதை! நான் கூறுகிறபடியே நீ அவரிடம் சொல்லவேண்டும். 'உம்முடைய அடியாள் அமாவாசையன்று வருவாள். தேவரீரது கட்டளையின்படி நடக்க அவள் ஸித்தமாய் இருக்கிறாள். அவள் வந்து சேர்ந்தவுடன் அச்செய்தி ஒரு தாதியின்மூலம் தங்களுக்கு அறிவிக்கப்படும். தாங்களாக விரும்பும்வரையில் அவளைக் கண்ணால் காணுவதும் அவள் மொழிகளைக் காதால் கேட்பதுமான பாவம் தங்களுக்கு

ஏற்படாது' என்று தெரிவிக்கவேண்டும்" என்றாள்.

அப்படியே தூதன் சென்று அவ்விளமன்னனிடம் செய்திகளைக் கூறினான். அதைக் கேட்டு அரசன், "ஆஹா! ராஜகுமாரியின் மொழிகள் மிகவும் சாந்தமாயும் வெண்ணெய்போல் வெகு நயமாயும் இருக்கின்றன. ஆயினும் பெண்பாலாயிற்றே! அவள் நிழலும் என்னை அணுகலாகாது" என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டவனாய் அப்பாழடைந்த கோயிலிலேயே இருந்தான். தன் மனைவியாகப் போகும் ராஜகுமாரியின் வரவை அவன் மனம் எதிர்பார்த்தும் பாராமலும் இருந்தது.

கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியன்று ராஜகுமாரி நகரின் எல்லையிலுள்ள பூஞ்சோலையில் அரசன் இருந்த சிவாலயத்திற்கு அருகே தன் பரிவாரங்களுடன் வந்து தங்கினாள்.

## அத்தியாயம் 2

## மாம் பூ

அமாவாசை கழிந்து பிரதமை வந்தது. அதிகாலையில் சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்து இளவேந்தன் ஆலயத்திற்கு வெளியே குளத்துப் படியில் வந்து நின்றான். குளத்திலுள்ள தாமரை மலர்கள் யாவும் நாயகனான கதிரவனை வரவேற் பதற்கு ஸித்தமாய் இருப்பனபோன்று விளங் கின. திடீரென்று மரங்களுக்கிடையே குளக் கரை யோரமாய்ச் சேடியொருத்தி தன்னை நோக்கி வருவதை அரசன் கண்ணுற்றான். அமா வாசை இரவுபோன்ற கரிய நிறமான ஆடையை அவள் அணிந்திருந்தாள். சந்திரகலை போன்று வெளுத்த மாம்பூவின் கொத்தொன்று அவள், கையில் விளங்கிற்று. ஆச்சரியமும் வெறுப்பும் கொண்ட அரசன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான். அப்பெண் அரசனை அணுகிச் சிறிது தூரத்தில் நின்றுகொண்டாள். "அரசே, என் தலைவி தான் இங்கே வந்துசேர்ந்த செய்தி யைத் தங்களுக்கு அறிவித்து வரும்படி என்னை அனுப்பினாள். ஓர் ஆடவனைத் தன் அந்தரங்கத் தோழியாய்க் கொள்ள முடியாதாகையால் ஒரு பெண்பாலையே தங்களிடம் அனுப்பும்படி இருப்

பதைக் குறித்துத் தங்கள் மன்னிப்பை வேண்டு கிருள். இம்மலரைத் தங்கள்பால் சேர்ப்பித்து, தன் நாதர் சுகமாய்ப் பள்ளியுணர்ந்த க்ஷேம சமாசாரத்தைத் தெரிந்துவரும்படி இவ்வடி யாளை அனுப்பியிருக்கிருள்" என்று சேடி கூற வும், அரசன், "சேடியே, போய் உன் தலைவியிடம் என் சந்தோஷத்தைச் சொல். தூக்கமானது அவளைப்போல் உலகமறியாதவர்களுக்கு ஏற் பட்டதேயன்றி மனநோய் கொண்டவனுக்கு அன்று. அவனுக்குப் பொழுது விடிவதே தூக்க மற்ற இரவுக்கு மருந்தாகும்" என்ருன்.

அதற்குப் பதில் சேடி, "அரசே, தாங்கள் அறியாமற் பேசுகிறீர்கள். இதைக்காட்டிலும் சிறந்த மருந்துகள் உலகில் எவ்வளவோ இருக் கின்றன. தங்கள் வியாதியையும் அதற்குரிய சிகிச்சையையும் நான் அறிவேன்" என்ருள்.

அரசன் வியப்புடன், "பெண்ணே, நீ உன் இனத்துக்கேற்ற துணிவுகொண்டவளாக இருக் கிருய்" என்ருன்.

"ஆஹா! எங்கள் இனத்தாரைப்பற்றித் தாங் கள் அவ்வளவு அறிந்தவரா? அரசே, உலகில் ஸ்திரீ புத்தியே அதிக சஞ்சலமானதென்று சொல்லு வார்கள். அதைப் பொருட்படுத்துவதும் சாத் தியமன்று அப்படியிருந்தும் தாங்கள் ஒரு ஸ்திரீ யின் நிலையற்ற தன்மையைக் குறித்து வருந்திக் கொண்டு இப்பாழடைந்த கோயிலில் அடைந்து கிடக்கிறீர்களல்லவா? தங்களைப்போலவேதான்

முற்காலத்தில் உலக அறிவு முற்றும் பெருத ஓர் இளமன்னன் இருந்தான். அவனுக்கு அவன் அன்பை முற்றும் கொள்ளைகொண்ட மனைவி ஒருத்தி இருந்தாள். ஆனால் அவள் நெடுநாள் ஜீவித்திருக்கவில்லை. தங்களைப் போலவே அம் மன்னனும் ராஜ்ய காரியங்கள், சிறந்த போகங் கள் யாவற்றையும் துறந்து தீராத துக்கத்தில் மூழ்கியவனாய் இம்மாதிரியான ஒரு பாழடைந்த கோயிலில்தான் வசித்துவந்தான். அவனைத் தேற்றி ராஜ்யத்திற்குத் திரும்பி வரும்படி செய்ய ஒருவருக்காவது சக்தி இல்லை. கடைசியில் அர சனைத் தேடி யார் வந்தார்களென்று நினைக்கிறீர் கள்? என்னைப்போன்ற ஓர் அற்பச் சிறு பெண் ணல்ல. வயது முதிர்ந்த ஒரு பெரியார், ராஜ குலத்துக்குக் குருவாயிருப்பவர், மரவுரி அணிந் திருக்கும் மன்னனை அணுகி ஒன்றும் கூறுமல் மௌனமாய் நின்ருர். அவ்விருவரும் அவ்வாறு நின்றிருக்கும் பொழுது, அதோ அம்மரத்தினின் றும் பழுத்த இலையொன்று உதிர்ந்து நிச்சலமான குளத்து ஜலத்தில் விழுகின்றது பாருங்கள், அது போல் ஒரு மூங்கில் மரத்தினின்றும் வாடி வதங் கிய இலையொன்று பூமியில் உதிர்ந்தது. அதைப் பார்த்துக் குருவானவர் 'ஐயோ' என்று வாய் விட்டுத் துக்கித்தார். அதோடு நில்லாமல் பூமியில் விழுந்து புரண்டு கோவென்று கதற லானுர். 'அடடா! ஸ்வாமி! எதற்காக இவ் வளவு வருத்தம்?' என்று அரசன் கேட்க, 'ஐயோ,

என்ன காலம்! அம்மரத்தினின்றும் இலை உதிர்ந்ததை நீ கவனிக்கவில்லையா?' என்று குரு கூறினார். அரசன் இந்தப் பதிலைக் கேட்டு மிகவும் வியப்படைந்து, 'ஸ்வாமி! இதென்ன தங்களுக்கு இவ்வளவு அறியாமை? மரத்தினின்றும் ஓர் இலை உதிர்ந்ததற்கே தாம் இவ்வாறு தீராத துயரம் அடைகிறீரே!' என்றான். அதற்குக் குரு, 'அரசே! நீதான் அறியாமல் பேசுகிறாய். ஓர் இலை உதிர்ந்ததைக் குறித்து நான் துக்கிப்பதை நீ அறியாமையென்று பரிகசிக்கிறாயே. சாவென்பது இதைக் காட்டிலும் வெகு பெரிதா? அப்படியிருந்தும் நீ ஒரு மங்கையின் மரணத்திற்காக உலகத்தையே முற்றும் துறந்துவிட்டாய். ஒரு பெண்ணின் சாவானது சிருஷ்டியாகிய விருட்சத்தினின்றும் ஓர் இலை உதிருவது போன்றதே யன்றி வேறென்ன?' என்றார். அப்படியிருக்க ஒரு பெண்ணின் நிலையற்ற தன்மைக்காக யாவற்றையும் தாங்கள் துறந்திருக்கும் அறியாமையை என்னென்று சொல்லுவேன்? அம்மூங்கில் மரத்தின் இலைகளைக் காட்டிலும் மங்கையரின் மனம் இன்னும் நிலையற்றதல்லவா? அம்மரத்தினின்றும் இலை உதிர்ந்து ஜலத்தில் விழுந்துவிட்டது என்று தாங்கள் கரைகாணாச் சோகத்திற்கு ஆளாவது நியாயமோ?''

இவ்வாறு கூறிவிட்டுச் சேடியானவள் தன் கையில் இருந்த மாப்பூக் கொத்தை அரசன் காலடியில் வைத்துவிட்டுத் திரும்பி மரங்களி

னிடையே சென்று மறைந்துவிட்டாள். அரசன் வியப்புடன் அவள் சென்ற வழியே பார்த்துக் கொண்டு நின்றான். நீரில் ஒய்யாரமாய் மிதந்து செல்லும் அவள் அழகிய உருவத்தை அரச னுடைய கண்கள் அவன் விருப்பத்தை மீறிக் கவனிக்கத் தொடங்கின. குனிந்து கீழே கிடந்த மலரை எடுத்து மோந்து பார்த்தான். 'மாம்பூவே, கம்மென்று மணம் வீசுகிறாய். தன் யஜமானிக் காகப் பேசிய இச்சாமர்த்தியக்காரப் பெண்ணின் குரலும் வெகு இனிமையாகவே இருந்தது. ஆயி னும் அவள் எப்படியும் ஒரு பெண்ணல்லவா? லேசான காற்றிலும் பறந்து செல்லும் அம் மூங்கில் மரத்தின் இலைகளைப் போன்று நிலையற்ற சஞ்சல சுபாவம் உள்ளவர்களென்று தங்கள் இனத்தாரையே அவள் பழித்துப் பேசினாள். அவர்களே அப்படி ஒப்புக்கொள்ளும்பொழுது நான் ஏன் அவர்களை மேம்படுத்திக் கூறவேண் டும்?' என்று எண்ணியவனாய் மன்னன் அப் பூவைக் குளத்தில் எறிந்துவிட்டு வேதனை குடி கொண்ட மனத்துடன் ஆலயத்திற்குத் திரும்பிச் சென்று பகற் பொழுதைக் கழித்தான்.

## அத்தியாயம் 3

## பாதிரிப் பூ

இரவு முழுவதும் தூக்கம் வராமல் சருகுகளினால் ஆகிய படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த அரசன் பொழுது விடியுமுன்னமே எழுந்து ஆலயத்திற்கு வெளியே குளத்துப் படியில் வந்து நின்றான். விடியற்காலையில் ஒளி மங்கிய நக்ஷத்திரங்கள் நீரில் பிரதிபலித்தன. அரசன் மரங்களிடையே நோக்கியதும் முதல்நாள் போலவே காலில் சதங்கை ஒலிக்கச் சேடியானவள் கையில் ஒரு பாதிரிப் பூவை ஏந்தியவளாய்த் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். சூரியன் உதிப்பதற்கு முன் சற்றே செந்நிறம் பாய்ந்த ஆகாயத்தைப்போல் அவள் விளங்கினாள். மன்னனை அணுகி அவள், "அரசே, என் தலைவி இவ்வடியாள் மூலம் இம்மலரைத் தங்களுக்கு அனுப்பி, தாங்கள் இரவு சுகமாய் நித்திரைசெய்து துயிலுணர்ந்த க்ஷேம சமாசாரத்தை அறிந்து வரும்படி கூறினாள்" என்றாள்.

"சேடியே, 'காற்றில் பறந்து செல்லும் உலர்ந்த இலைகளைக் காட்டிலும் உறுதியற்றவர்கள் ஸ்திரீகள்' என்று நீயே கூறுகிறாய். அப்படிப்

பட்ட ஒரு ஸ்திரீயின் கொடுமைக்கு ஆளாகி மனம் வருந்தும் ஒருவனுக்குத் தூக்கம் எங்கிருந்து வரும்? நீ சொல்" என்றான். இதைக் கேட்டுச் சேடி நகைத்துக் கூறினாள்: "அரசே, நான் கேவலம் ஒரு சிறுமியே ஆயினும் தங்களைவிட வயது முதிர்ந்தவள் போலவே இருக்கிறேன். ஸ்திரீகளைப்பற்றி மிகவும் இழிவாகக் கருதும் தாங்கள் ஓர் இளஞ்சிறுமியின் வார்த்தைகளை நினைவில் வைத்திருப்பதுமன்றி அவைகளை ஒரு பொருட்டாகவும் மதிப்பது எவ்வாறு?"

இதைக் கேட்ட மன்னன் சற்று வெட்கமடைந்தான். "பெண்ணே, நீ வயதில் சிறியவளாயிருந்தும் உன் ஜாதிக்கேற்ற தந்திர சாமர்த்தியங்கள் இதற்குள்ளேயே உன்னிடம் பூர்ணமாய் இருக்கின்றன. சேடியே இப்படி இருந்தால் அவள் தலைவி எவ்வண்ணம் இருப்பாளோ?" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சேடி உள்ளம் மகிழ்ந்தாள். "அவள் ஒரு ஸ்திரீ. அது ஒன்றே தங்களுக்குப் போதாதா? அரசே, ஸ்திரீகள் அனைவரும் காற்றில் அடிபட்ட மூங்கில் இலைகள்போல் உறுதியற்றவர்கள். மூங்கில் குழாய்களைப்போல் சூன்ய இருதயங்களுடையவர்கள். ஆயினும் செடியைப் பார்த்து மலர்களை நிர்ணயிக்க முடியுமோ? நானும் மற்றவர்களும் பூண்டுகளுக்குச் சமானமே. என் தலைவியோ இச்சிறந்த பாதிரிப்பூப் போன்றவளா

வாள். அரசே, மலர்கள் அனைத்தையும் ஒன்ருய்ப் படைத்தும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி அழகையும் வாசனையையும் அமைத்திருக்கும் கடவுள் ஸ்திரீகளை மட்டும் அறிவில்லாமல் ஒரே மாதிரியாய்ச் சிருஷ்டிப்பாரென்று தாங்கள் கருதுகின்றீர்களா? உண்மையில் தங்களுக்குச் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தி குறைவென்று நினைக்கிறேன். சிலர் இப்பாதிரிப் பூவைப்போல் கண்ணுக்கு வெகு ரம்மியமாய் விளங்குகின்றனர். மற்றும் சிலரோ நேற்று நான் அளித்த நறுமணம் கமழும் மாமலர் போன்று இருக்கின்றனர். முன் ஒரு காலத்தில் தேசாந்தரம் சென்ற ஒரு கணவன் மீண்டும் வீடு திரும்பவே இல்லை. அவனுக்காகக் காத்திருந்த அவன் மனைவியின் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள்: ஒவ்வொன்ருய் வருஷங்கள் சென்றன. அவள் ரூபலாவண்யத்தைக் கண்டு மயங்கிய ஆடவர்கள் கணக்கில்லாமல் அவளை வந்து சூழ்ந்துகொண்டனர். ஆனுல் அவள் ஒருவருக்கும் இடங்கொடுக்கவில்லை. ஒருநாள் இரவு எண்ணெயில் திரியிட்டு ஏற்றிய தீபத்தைக் கையில் ஏந்தியவளாய் அவள் கங்காநதியை அடைந்து, ‘இத்தீபச் சுடரை என் நாதராகப் பாவித்து இவ்வாற்றில் விடுவேன். இது அணைந்தோ அல்லது நீரில் ஆழ்ந்தோ போய்விட்டால் என் நாதர் இறந்துவிட்டாரென்று அறிந்து நானும் உயிரை மாய்த்துக்கொள்வேன். அப்படி இச்சுடர் அணையாமல் மிதக்குமாயின்

அவர் திரும்பிவருவாரென்ற தைரியத்துடன் காத்திருப்பேன்' என்று யோசித்து அவ்வாறே செய்தாள். அன்று இரவு காற்றுப் பலமாய் அடித்தது. கங்காநதியில் அலைகள் சமுத்திரம்போல் கொந்தளித்தன. ஆனால் அம்மாதரசி இவை ஒன்றையும் பொருட்படுத்தாமல் தன் நம்பிக்கையையே பெரிதாகக் கருதியவளாய்த் தீபத்தை விட்டாள். அக்காட்சியைக் கணக்கற்ற நக்ஷத்திரங்கள் ஆகாயத்திலின்றும் நோக்கிக்கொண்டிருந்தன. அவளுடைய சிறு தீபத்தைக் கண்ணுற்று, 'ஐயோ பாவம்! இதை ஒரு சிறந்த தீபமாக இம்மாளிடப் பெண் நினைத்துக்கொண்டிருக்கிறாளே' என்று அவை பரிகசித்தன. அந்தப் பரிகாசப் பேச்சுக் கயிலையில் பரமசிவத்தின் காதுகளில் விழுந்தது. அவருடைய பிரபாவத்தினால் திடீரென்று காற்று ஓய்ந்து கங்கையின் கொந்தளிப்பும் அடங்கி அமைதி குடிகொள்ள, தீபமும் நிச்சலமான பிரவாகத்தில் மிதந்துசென்று ஒளிவிட்டுப் பிரகாசித்தது. உயரத் தோன்றும் வானத்தையும் நக்ஷத்திரங்களையும் பரிகசிப்பது போல் தெளிந்த நீரினுள் மற்றொரு வானம் நக்ஷத்திரக் கூட்டத்துடன் தென்படலாயிற்று. கருணாநிதியான பரமேசுவரர், 'வானமே, அதோ கீழே அந்நக்ஷத்திரங்களோடு கூடிய ஆகாயத்தைப் பார்த்தாயா?' என்று வினவினார். 'ஆஹா! அது வெறும் தோற்றமன்றோ?' என்று வானம் பதில் சொல்ல, மகேசுவரர் நகைத்தார். 'அட

புத்தியற்ற வானமே, நீ மட்டும் வெறும் தோற்ற மல்லாமல் வெகு நிஜமோ? யாவற்றிலும் நித்திய மாயும் சத்தியமாயும் உள்ளது அதோ மிதந்து செல்லும் சிறு தீபமேயாம். ஏனெனில், ஒரு பதிவிரதா சிரோமணியின் சிறப்பை அது விளக்குகின்றது அல்லவா?' என்றார். ஆற்றில் தீபமானது மிதந்துகொண்டே சென்று கண்ணுக் குத் தெரியாமல் மறைந்துவிட்டது. ஈசுவரா னுக்கிரகத்தினால் அப்பெண்மணியின் கணவனும் கொஞ்சகாலத்துக்குப் பிறகு திரும்பி வந்து சேர்ந்தான்" என்று கதையை முடித்துவிட்டுச் சேடியானவள் அரசனை நிதானமாய்ச் சற்று நோக்கினாள். பிறகு கையில் இருந்த மலரை மன்னன் பாதத்தடியில் வைத்துவிட்டு வந்த வழியே சென்றுவிட்டாள். அரசன் வெகு நேரம் வரை யோசனையுடன் அவள் சென்ற வழியை நோக்கிக்கொண்டு நின்றான். பிறகு கீழே கிடந்த புஷ்பத்தைத் எடுத்து, 'பாடலி புஷ்பமே, உன் செவ்விதழ்கள் எவ்வளவு அழகா யிருக்கின்றன! உண்மையில் இப்பெண்மணியின் நாக்கிலும் ஸரஸ்வதிதான் தாண்டவமாடுகிறாள் என்று நினைக்கிறேன். ஆயினும் என்ன? கடைசியில் பெண்ணல்லவா? உதடுகளில் தேன் சொட்டினாலும் அவர்கள் பற்களில் விஷ மன்றோ நிறைந்திருக்கிறது?" என்று எண்ணியவ னாய் அம்மலரைக் குளத்தில் எறிந்துவிட்டு வேதனையுற்ற இருதயத்துடன் ஆலயத்தினுள் சென்று இரவை எதிர்நோக்கி இருந்தான்.

## அத்தியாயம் 4

### மல்லிகை

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்த அரசன் சூரியோதயத்தில் எழுந்து ஆலயத்துக்கு வெளியே குளத்துப் படித்துறையில் வந்து நின்றான். அச்சமயம் இளஞ் சூரியன் தன் பொன்னிறக் கிரணங்களினால் கீழ்த்திசையை ஒளி மயமாக்கிக்கொண்டிருந்தான். வழக்கம்போல் சேடியும் கையில் மல்லிகை மலரொன்றை ஏந்தியவளாய்த் தன்னை நோக்கி வருவதை அரசன் கண்ணுற்றான். யௌவனத்தின் சாரமெல்லாம் திரண்டு ஒரு பெண் வடிவம் எடுத்து வந்ததுபோல் விளங்கிய அந்நங்கை மன்னனை அணுகிப் புன்னகையுடன், "அரசே, என் தலைவி இவ்வடியாள் மூலம் இம் மலரைத் தேவரீருக்கு அனுப்பித் தங்கள் குசல ஸமாசாரத்தை அறிந்துவரும்படி கூறினாள்" என்றாள்.

அரசன் தன்னை அறியாமலே தான் புன்னகை கொண்டதை உணர்ந்து மனத்திற்குள்ளே தன்னைக் கடிந்துகொண்டு, "சேடியே, தன் இஷ்டத்திற்கு விரோதமாய் உன் போன்ற பெண் பாலாருடன் பேச நேர்ந்திருக்கும் ஒருவனுக்குத்

தூக்கம், நிம்மதி இவைகள் ஏது? நல்லவர்களோ, கெட்டவர்களோ, அவர்களால் அவனுக்கு மனவமைதி என்பது மட்டும் இல்லையே" என்றான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டுச் சேடி நகைத்த வண்ணம் அரசனை நோக்கிக் கூறினாள்: "அரசே, நல்ல அறிவைப் புகட்டக்கூடியவர்களோடு மட்டும் பழகுவதால் தங்களுக்கு விஷயங்கள் கொஞ்சம் புலப்படுகின்றன என்று தோற்றுகிறது. எனக்குப் பதினைந்து வயதுதான் ஆகின்றதெனினும் மங்கையருக்கு இயற்கையாயுள்ள புத்தி சாதுரியமானது அடியோடு இல்லாமற் போகவில்லை. இப்பொழுது பாருங்கள்: எங்களைப்பற்றி நீங்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் கொஞ்சம் மாறி இருக்கிறது. எங்களுள் சிலராவது கொஞ்சம் நல்லவர்களாய் இருக்கலாமென்று ஒப்புக்கொள்ளுவதாய் இருக்கிறீர்களன்றோ? இவ்விதம் தங்கள் மனம் மாறியதன் காரணம் என்னவோ?"

இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசனுக்குச் சற்றுக் கோபம் எழுந்தது. அவளுடன் சம்பாஷிப்பதில் விருப்பங் கொள்ளலாகாது என்று அவன் கருதியிருந்தான். ஆனால், அப்படிச் செய்ய அவனால் முடியவில்லை. அரசன், "சேடியே, காரியம் இல்லாமல் காரணம் ஏது? என் கொள்கைகள் முன்பு இருந்ததற்குச் சற்றும் மாறுபடாமலே இருக்கின்றன. நானும் எப்பொழுதும் போலவேதான் இருக்கின்றேன்"

என, சேடி ஒரு புன்னகை புரிந்து, "அப்படியல்ல. என் பெயரைப் படிப்பதில் எனக்கு ஏதாயினும் சிரமம் இருக்குமா? அதுபோல் தங்களிடத்தில் உண்டான அம்மாறுதல் எனக்குத் தெளிவாய் விளங்குகிறது" என்றாள்.

அரசன் அவ்வலையில் சிக்கினான். "ஆனால் உன் பெயரென்ன?" என்று அவன் கேட்க, "என்னை மதுபமஞ்சரி என்று கூறுவார்கள்" என்றாள் சேடி.

"உனக்குப் பொருத்தமான பெயரே" என்றான் மன்னன்.

"அதெப்படிக் கூற முடியும்? நான் எப்படிப்பட்டவள் என்று தங்களுக்குத் தெரியுமா? உள்ளும் புறமும் ஒன்று என்று கருதினால் கொட்டாங்கச்சியைப் பார்த்து உள்ளிருக்கும் ருசிகரமான தேங்காயை எப்படி அறிந்து கொள்ளுவீர்கள்?" என, அரசன் புன்சிரிப்புடன், "பெண்ணே, உன் உபமானம் சரியன்று. அற்பமான கொட்டாங்கச்சியை உன்னுடன் யாரேனும் ஒப்பிடுவார்களோ?" என்றான்.

சேடி தன் கைகளைக் கொட்டி, "அரசே, இதென்ன இதற்குள் யாவற்றையும் மறந்து பேசுகிறீர்கள்? வெளிக்கு அமிருதமயமாகத் தோற்றினும் உள்ளே விஷமே குடிகொண்டிருக்கும் என்பதன்றோ தங்கள் அனுபவம்? வெளித்தோற்றத்திலிருந்து என்னுள் இருக்கும் குணங்களைத் தாங்கள் ஒருகாலும் அறிய முடி

யாது. ஆயினும் என் தேவி மற்றெல்லாச் சேடிகளையும்விட என்மீதே மிகவும் பக்ஷமாய் இருக்கிறாள் என்றால், அது என் குணங்களுக்காகவேயன்றி வெளித்தோற்றத்திற்கல்ல. அதிகம் தேர்ந்த ஒரு குருவினிடமிருந்து நான் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவை மிக்க அருமையான விஷயங்கள். தங்களது வருத்தத்தை யெல்லாம் ஒரு நொடியில் மறையும்படி செய்யக்கூடிய கதைகள் அநேகம் எனக்குத் தெரியும். தாங்கள் கனவிலும் கண்டறியாத ஒரு லோகத்திற்குத் தங்களை அழைத்துச் செல்ல என்னால் முடியும். அவ்விடத்தில் விருக்ஷங்கள் எப்பொழுதும் மது மயக்கமேறிய வண்டுகளின் ரீங்காரத்துவனியுடன் கூடிய புஷ்பங்கள் நிறைந்தனவாகவே இருக்கின்றன. அங்கே பகலில் சூரியன் உக்கிரமாய்த் தகிப்பதில்லை. இரவிலோ சந்திர கிரணங்களின் ஸ்பரிசத்தினால் சந்திரகாந்தக் கற்கள் அமிருதத்தைப் பெருக விடுகின்றன. ஸ்படிகம்போல் தெளிந்த நீரையுடைய தடாகங்களில் ஹம்ஸங்கள் நிறைந்திருக்கின்றன. மரகதக் கற்களினால் ஆகிய படிகளில் மயில்கள் மலையுச்சியிற் படிந்திருக்கும் மேகங்களின் முழக்கத்தைக் கேட்டு நர்த்தனம் புரிகின்றன. காதலர்களை ரகசியமாய் நாடிச் செல்லும் ரமணிகளுக்கு வழி காண்பிப்பதற்கென்றே மின்னல்கள் பிரகாசிக்கும். அங்கே வானவில்லானது கரிய

மேகங்களிடையே எப்பொழுதும் ஒளிர்கின்றது. அப்படியே நிலவு படிந்திருக்கும் உப்பரிகையின் மீது காதலர்கள் சிறந்த மதுவையுடைய பொற் கிண்ணங்களில் பிரதிபலிக்கும் தமது காதல் வசப்பட்டுத் துன்புறும் முகங்களைக் கண்ணுற்றுச் சிரித்துக்கொள்வார்கள். மலய மலையி லிருந்து சந்தன மணத்துடன் வீசும் இளந்தென் றலை நுகர்ந்துகொண்டும், கடலிலிருந்து கடைந்து எடுக்கப்பட்ட சிவப்பு, பச்சை முதலிய உயர்ந்த ரத்தினங்களை ஒருவர்மீது ஒருவர் வீசி எறிந்து விளையாடிக்கொண்டும் அவர்கள் பொழுது போக்குவார்கள். அங்கு ஆடவர்களும் பெண் மணிகளும் ஒருவரோடு ஒருவர் என்றென்றும் நிலைத்த காதல் பூண்டவர்களாக விளங்குகின்ற னர். குளத்தில் உள்ள தாமரைகள் அங்கு என் றும் வாடாமலே இருக்கின்றன" என்றாள்.

இவ்வாறு சேடி கூறும்பொழுது அரச னுடைய கண்களில் நீர் ததும்பிற்று. "ஆஹா! பெண்ணே, அவ்வழியாகக் காதல் நிறைந்திருக் கும் பிரதேசத்திற்கு என்னை அழைத்துச் செல் வாயா?" என, சேடி மன்னனை இரக்கம் நிறைந்த பார்வையுடன் சற்று நோக்கி, பிறகு கையில் இருந்த மல்லிகை மலரை அவனது காலடியில் சமர்ப்பித்து விட்டு விரைவில் மரங்களின் இடையே சென்று மறைந்தாள். கண் பார்வை யிலிருந்து மறையுமட்டும் அவளையே நோக்கி யிருந்த அரசன், கீழே கிடந்த மலரை எடுத்து,

"மல்லிகையே! உனது இனிய மணத்திற்கு உவமையில்லை. ஆயினும் அவ்விளஞ் சேடியின் குரல் இனிமைக்கு அதுவும் ஈடாகாது. ஆனால், அந்தோ! பெண்பாலல்லவா அவள்? அட! என்னே இந்த ஸ்திரீகளின் சக்தி! அவர்களால் இனி என்னை ஒருபோதும் மயக்கமுடியாது என்று நான் எண்ணியிருக்க, இப்பொழுது இச் சிறுமி தன் செவ்விதழ்களினின்று வரும் சில இனிய சொற்களினால் அவ்வுறுதியைக் குலைக் கின்றனளே!" என்று தனக்குள் கூறிக்கொண் டான். மலரையும் தடாகத்தையும் மீண்டும் நோக்கி, "மல்லிகையே, நீ வாடுமளவும் உன்னை எறியாமல் வைத்திருப்பேன்" என்று தீர்மானித் தவனாய்ச் சேடியின் ஞாபகத்தினால் அலைக்கப் பட்ட உள்ளத்துடன் கோயிலுட் சென்றான்.

# அத்தியாயம் 5

## மலரற்ற நாள்

இரவு முழுதும் தூக்கம் இல்லாமல் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டிருந்த அரசன் பொழுது விடிந்ததும் எழுந்து கரையோரமாய்ப் படித்துறையில் வந்து நின்றான். மரங்களில் தங்கிய பறவைகள் அப்பொழுதுதான் எழுந்து பகலவனை வரவேற்க மதுரகீதம் பாடுவது அவன் செவிகளில் விழுந்தது. எதிரே மரங்கள் அடர்ந்திருக்கும் வழியை நோக்கினான். ஆனால் தினந்தோறும் வரும் சேடியை அன்று காணவில்லை. தாமரை மலர்கள் நிரம்பிய அத்தடாகத்தருகில் அவன் சிறிதுநேரம் நின்று பார்த்தான். "இன்று அதிக நாழிகை தூங்கியிருப்பாள். அல்லது தலைவி ஏதாவது வேலைகள் இட்டிருக்கலாம். அல்லது கொண்டுவருதற்குப் புஷ்பங்கள் ஒன்றும் அகப்படவில்லையோ?" என்று தானே கூறிக்கொண்டான். விடிந்து வெகு நேரமாய்விட்டது. சேடி வரவில்லை. 'அவள் வந்தாலும் வராவிட்டாலும் எனக்கு ஆகவேண்டியதென்ன? இவ்விருக்ஷங்கள், தடாகம் யாவும் அவள் இவ்வனத்திற்கு வருவதற்கு

முன்பு இருந்ததுபோலவேதான் இப்பொழுதும் இருக்கின்றன. முன்போல் அவைகளைத் துணையாகக் கொண்டு நாட்களைக் கழிக்க என்றால் முடியாதா?" என்று கூறியவனாய்க் கரையோரமாய்ச் சிறிதுநேரம் இங்குமங்கும் உலாவினான். ஆயினும், அவன் எதைச் செய்துகொண்டு இருப்பினும் அவனுடைய கண்கள் மட்டும் சேடி வழக்கமாய் வரும் திக்கையே நோக்கியவண்ணம் இருந்தன.

மீண்டும் தனக்குள், 'நிச்சயமாய் இவ்வனம் இன்று காலை சோபை குறைந்துதான் காண்கின்றது. இது ஒரு விந்தையே. இவ்விருக்ஷங்கள், கோயில், இத்தாமரைத் தடாகம் யாவும் எப்பொழுதும் இருப்பதுபோலத்தான் இருக்கின்றன. அச்சேடியும் அவள் கொண்டுவரும் மலரும் மட்டுமே இல்லை. ஒரு பெண்ணையும் புஷ்பத்தையும் தவிர வேறு எதுவும் குறைந்திருக்கவில்லையே! அக்குறை ஒன்றினாலேயே இவ்வனத்தில் இவ்வளவு மாறுதல் ஏற்படக்கூடுமா?' என்று எண்ணியவனாய்ப் படியில் உட்கார்ந்து பொய்கையை நோக்கியவண்ணம் சற்றுநேரம் இருந்தான். 'ஆஹா! என்ன மணம் பொருந்திய மலர்கள்! அந்த யுவதியோ—அவளை யுவதியென்றும் சொல்வதற்கு இல்லை. இன்னும் இளம் பாலிகையே அவள். ஆயினும் அப்படியும் சொல்லமுடியாது. பகலுக்கும் இரவுக்கும் இடையிலுள்ள சந்தியைப்போல் பால்யத்

யௌவனம் இவ்விரண்டும் அற்ற நிலையில் அவள் விளங்குகிறாள். இவ்விரண்டினுடைய வனப்பு, குணங்கள் இவற்றுடன் வேறொரு தனி அழகும் அன்றோ அவளிடம் காணப்படுகின்றது? யுவதி யென்றாலும் இன்னும் பாலிய வயது முற்றும் நீங்கவில்லை. காலையில் அப்பொழுதுதான் இதழ் களை விரித்து வரும் மலர்களைப்போலவே, தன் கையில் கொண்டு வரும் அப்புஷ்பங்களை யொத்தே விளங்குகிறாள் அவள். அவைகளைப் போலவே அவளிடத்திலும் ஓர் இனிய மணம் வீசுகிறது. ஆனால் அசேதனமான அம்மலரைக் காட்டிலும் அவள் இன்னும் மேல் அல்லவா? காலையில், தன் மெல்லிய பாதம் பூமியில் பட்டும் படாமலும் நடந்துவரும் அப்பாவையின் உருவம் என் கண்முன்னேயே நிற்கின்றதே! மலை மீது படிந்திருக்கும் இளம் பனிபோல் ஒரு நீலத் துகில் அவள் மேனியை மறைத்திருப்பினும் அது அவள் சௌந்தரியத்தை இன்னும் அதி கரிக்கவே செய்கிறது. ஆஹா! அவள் இனிய குரலோசையில் ஓர் அபூர்வ சக்தி இருக்கின்றது என்று நினைக்கிறேன். செவிக்கு அமிருதம் போன்ற அக்குரல் கேட்பவரின் ஆவியைக் கொள்ளை கொண்டு, தான் கூறும் வார்த்தை களின் அர்த்தத்தைக் கவனிக்கவொட்டாமல் செய்துவிடுகின்றது. ஓர் இளம் மூங்கில். இதன் மீது இலேசாய்க் காற்று அடித்தால், காற்று அடித்துச் சென்ற பிறகும் அம்மூங்கில் கிளையின்

முறுமுறுக்கும் சப்தம் கேட்பதுபோல், அவள் குரல் இப்பொழுதும் என் காதில் ஒலிக்கிறது. நாளைக் காலை மீண்டும் அதைக் கேட்கும் வரை நான் காத்திருக்க வேண்டுமே! ஆனால் நாளைக்கு மட்டும் அவள் வருவாள் என்று என்ன நிச்சயம்? இன்று போல நாளைக்கும் ஏதாயினும் தடங்கல் நேர்ந்து அவள் வராமலே இருக்கலாமன்றோ?'—இவ்வாறு பலவிதமாய் அலைக்கப்பட்ட உள்ளத்துடன் அரசன் அன்று பகலைக் கழிக்கலானான். மறுநாள் காலை சேடி வருவாளென்ற நம்பிக்கை ஒருபுறம் இருக்க, ஒருவேளை அவள் வராமல் இருப்பாளோ என்ற கவலையும் மற்றொருபுறம் அவனைப் பிடித்தது.

## அத்தியாயம் 6

### சம்பகம்

இரவை ஒருவாறு கஷ்டப்பட்டுக் கழித்து, விடிவதற்கு வெகுநேரத்துக்கு முன்பே அரசன் எழுந்து குளப்படியில் வந்து நின்றான். அவன் தலைக்குமேல் ஆகாயத்தில் சில ஹம்ஸங்கள் வடதிசையை நோக்கி வேகமாய்ப் பறந்து சென்றன. அவற்றின் உடல்கள் அப்பொழுது தான் உதித்த சுக்கிரனது ஒளியில் பளபள வென்று பிரகாசித்தன. கடைசியில் கதிரவன் உதயமானான். அச்சமயம் சேடியும் விரைவாய்த் தன்னை நோக்கி வருவதை அரசன் கண்ணுற்றான். அவன் கண்களுக்கு அவ்வதிகாலையின் குளிர்ந்த பனி யாவும் திரண்டு உருவெடுத்து வந்ததுபோலவும், தன் இருதயத்தில் மடிந்து சாம்பலான காதல் புத்துயிர் பெற்று எழுந்ததன் சின்னம் ஒரு பெண் வடிவத்தில் தோற்றுவது போலவும் அவள் விளங்கினாள். தன் கையில் இருந்த சம்பக மலரின் இனிய மணம் நாற்புறத்திலும் வீச அவள் அரசனை அணுகி, "ஐயனே, என் தலைவி இவ்வற்பச் சேடியின் மூலம் இம் மலரைத் தேவரீருக்கு அனுப்பித் தங்கள் சௌக்கியத்தை அறிந்துவரும்படி கூறினாள்" என்றான்.

அரசன், "பிரிய சேடியே. தன் நண்பர்களால் துறக்கப்பட்ட ஒருவனுக்குச் சௌக்கியம், நிம்மதி இவைகள் ஏது? நீயே சொல்" என, "ஆனால் அத்தவறு யாருடையது? அரசே, சத்தியம், அசத்தியம் இரண்டையும் பகுத்தறியச் சக்தியற்றவனாய் ஒருவன் இருந்தால் அத்தவறு அவனுடையதே அல்லவா?" என்றாள் அவள்.

அரசன் ஒரு பெருமூச்செறிந்து அதற்குப் பதில் கூறினான்: "அந்தோ! அதைத் தீர்மானிப்பது கடினமல்லவா? இம்மாயவுலகில் நன்மை தீமை இரண்டையும் அறியச் சக்தி வாய்ந்திருப்பவர் மிகச் சிலரே. அசத்தியத்திற்கு எவ்வளவோ உருவங்கள் உண்டு. இத்தகைய சௌந்தரிய வடிவத்திலும் அது தோன்றக்கூடுமல்லவா?"

அதற்குச் சேடி ஓர் இளமுறுவலுடன், "அரசே, என்னைப்பற்றி அவ்வளவு உறுதியாய்க் கூறிவிடாதீர்கள்" என்றாள்.

"ஒன்றுமட்டுந்தான் எனக்கு நிச்சயமாகி இருக்கிறது. அதாவது, காதல் மடிந்த ஜன்மம் வீண் என்பது."

"அதெப்படி? ஒருநாளும் இல்லாத ஒன்று எப்படி மடிய முடியும்? காதலென்பதே இன்னதென்று அறியாத நீங்கள் உங்களைவிட்டு அது அகன்றதாகக் கூறுவது எவ்வாறு?"

இம்மொழிகளைக் கேட்டு அரசன் வியப்படைந்தான். "இளஞ் சிறுமியான உனக்குக்

காதலைப்பற்றி என்ன தெரியும்?" என்று மன்னன் வினவ, அவனை ஒரு நிமிஷம் மௌனமாய் நோக்கிவிட்டுச் சேடி, "அரசே, காதலுக்கும் வயதுக்கும் என்ன சம்பந்தம்? அது ஸ்மரணையினால் ஏற்படுவது. மனிதர்கள் அனுபவத்தினால் அறிந்து முதிர்ந்தபிறகே அதைப் பெறுகிறார்கள். சிலபேர்களுக்கு ஞாபகசக்தி மிக அதிகம். அவர்கள் மறு ஜன்மங்களிலும் தங்கள் அநுபவ அறிவை விடாமல் கைப்பற்றிச் செல்லுகிறார்கள். ஜன்மாந்தர வாசனையின் பலத்தினால் அவர்கள் பெரிய ஞானிகளாய் இருப்பார்கள். அப்படிப் பட்டவர்களில் நானும் ஒருத்தியென்று அறிந்து கொள்ளுங்கள். தாங்கள் கூறுவதுபோல் நான் ஓர் இளஞ் சிறுமியேயெனினும் இம்மாதிரி விஷயங்களில் ஒரு சிறுமியும் பெரிய மன்னனைவிட அறிவு முதிர்ந்தவளாய் இருக்கலாம். ஏன், தங்களைக்காட்டிலும் நான் தெரிந்தவளாய் இருக்கலாகாதா? முன் ஜன்மத்தில் புஷ்பபாணனாகிய மன்மதனை நான் வெகுவாய்ப் பூஜித்து அவனுடைய அருளால் எவ்வளவோ ரகசியங்களை அறிந்திருந்தேன். அவ்வறிவின் வாசனை எனக்கு இந்த ஜன்மத்திலும் ஏற்பட்டிருக்கிறது. அரசே, தங்களுக்குத் தெரியாத இவ்விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேளுங்கள்: அன்பானது மூன்று குணங்கள் அமையப்பெற்றது. அம் முக்குணங்களும் நன்றாகப் பிணைக்கப் பட்டிருக்குமாயின் இவ்வுலகில் எதுவும்—யமன்

கூட—அதை அறுத்தெறிய முடியாது. அவை களை வெவ்வேருய்ப் பிரித்தாலோ, வாழ்வில் ஏற்படும் பல துன்பங்கள் வெகு ுகுவாய்த் துண்டிக்கப்பட்டுவிடும். தங்கள் விஷயத்தில் அவ்விதமேதான் நேர்ந்திருக்கிறது. இம்மூன்று குணங்களும் நன்ருய்ச் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினுலேதான் தங்கள் காதல் வெறும் சேர்க்கையையன்றி யாவும் பொருந்திய ஓர் உயர்ந்த சேர்க்கையைப் பெறவில்லை" என்ருள்.

அம்மொழிகளைக் கேட்ட அரசன், "அம் மூன்று குணங்கள் யாவை?" என்று வினவினுன்.

"பரிபூர்ணமான நிலையை அடைவதற்கு மூன்றுவிதமான அன்பு சேரவேண்டும். அதாவது: சரீரத்தைப்பற்றியதும், புத்தியை அடுத்ததும், ஆத்மாவை அண்டியதுமான மூன்றுவித அன்பேயாம். அப்படிப்பட்ட அன்பு ஒரு ஸ்திரீக்கும் புருஷனுக்குந்தான் ஏற்படக்கூடியது. ஆண், பெண் இருபாலாரிலும் மனம் தன்னைப்பற்றிய நினைவு இல்லாமல் ஒன்று மற்ருென்றினுடைய அழகையே விரும்பி நிற்கிறது. ஆணென்றும் பெண்ணென்றும் பேதம் இருந்தாலன்றிச் சரீரத்தைக் கண்டு ஏற்படும் மோகம் இராது. அப்பொழுது இயற்கையில் குறை உண்டாகும். தன் காதலனுடைய அன்பை ஆயுள் பரியந்தம் பெற விரும்புபவள் முதலில் குற்றமற்ற ஆகிருதியை உடையவளாய் இருக்க

வேண்டும். இல்லாவிடில் அவள் மனம் மற்றச் சரீரங்களை நாடிச் சென்றுவிடும். அது புலன்களின் இயற்கை. இரண்டாவது புத்தி. இது இல்லாவிடில் காதலனுடைய மதிப்பு வேறு இடம் சென்றுவிடும் மூன்றாவது, குணம். அது இல்லையென்றாலோ, அவனுடைய உள்ளமே அவளை விட்டு அகன்றுவிடும். குணம் இல்லாவிடில் அழகு, புத்தி இரண்டும் சொற்ப காலத்துக்கேயன்றி நீடித்த நாள் பயன்தரா. இவ்விஷயத்தில் ஸ்திரீகளுக்கு எவ்விதமோ அவ்விதமேதான் புருஷருக்கும். ஆனால் ஒரே ஒரு பேதம் மட்டும் உண்டு. அதாவது அவர்கள் சரீரம், புத்தி, மனம் இவை யாவும் முற்றும் வேறாய் இருக்கின்றன என்பதேயாம். ஸ்திரீயிடத்தில் குணமென்று கருதப்படுவது புருஷனிடத்தில் நேர் விரோதமானதாகக் கொள்ளப்படலாம். அவனது ஆண்மைக்குக் குறைவாயிருப்பதே அவளுக்குப் பெரிய சக்தியாகவும் சிறந்த பூஷணமாகவும் அமையலாம். அரசே, தங்கள் காதலுக்கு ஏற்றவளைத் தேர்ந்தெடுக்காதது தங்களது புத்திக் குறைவு அல்லவா? அவள் மிக்க சௌந்தரியவதியாய் இருப்பாளென்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் சௌந்தரியம் மட்டுந்தான் இருந்திருக்கும். அவள் தங்கள் காதலுக்குத் துரோகம் இழைத்தது நன்மையேயொழியத் தீமையல்ல. கூரிய வாளினால் புண்பட்டதுபோல் தங்களுக்கு அப்பொழுது இருந்திருப்பினும் நாளடை

வில் அப்பண் அறிவந்திருக்கும். இவ்வளவு காலத்துக்குப் பிறகு, நீங்களும் அக்காதல் பூரணமான காதல் அன்று, நீடித்திருக்கக்கூடிய தன்று என்பதை அறிந்திருப்பீர்கள். அப்பிழை யின் பயனையும் தாங்கள் அநுபவித்தாய் விட்டது. இப்பொழுது தங்கள் கண் திறந்துவிட்டது. சென்றவைகளைப்பற்றித் தாங்கள் துக்கிப்பதை விடச் சந்தோஷப்படுவதே முறையாகும். பின் வரப்போவதை யார் கண்டார்கள்? எது புரு ஷார்த்தமென்பதை அறியாதவன் அதை எப்படி அடைவான்? அப்புருக்குணங்களும் பொருந்திய காதலை என் தலைவியிடம் தாங்கள் பெறுவீரென் பதில் ஐயமில்லை. அவள் தங்களுக்கு உரியவள் என்பதே என் நம்பிக்கை."

அவர் கூறி முடிக்கும்வரை திகைப்புடன் கேட்டுக்கொண்டிருந்த அரசன் திடுக்கிட்டு, "வேண்டாம். உன் யஜமானியைப்பற்றிப் பேச வேண்டாம். அது ராஜ்யகாரியமாய் ஏற்பட்ட விஷயம். உன்னைப்பற்றிச் சொல்; கேட்பேன். உன் அன்பை என்றும் நிலைத்திருக்கும்படி செய்யக்கூடிய அம்மூன்று குணங்களையும் நீ சட்டாயமாய்ப் பெற்றிருக்கிறாய். நீ கூறியபடி அவை உன்னையும் உன் காதலனையும் என்றும் அறுபடாவண்ணம் உறுதியாகச் சேர்த்துப் பிணைத்திருக்குமல்லவா?" என, சேடி உதட்டில் விரலை வைத்து அரசனை எச்சரிக்கை செய்பவள் போல் தலையை அசைத்தாள். பிறகு, "ஸ்....நீங்

கள் இப்படிப் பேசினால் நான் இனி இங்கே வர மாட்டேன்" என்று ஒரு புன்னகையுடன் அரசனை நோக்கிக் கூறி, மலரைக் கீழே வைத்து விட்டுத் திரும்பிச் சென்றாள். சிறிது தூரம் சென்று கண்ணுக்கு மறையுமுன் திரும்பி, மீண்டும் ஒருமுறை மன்னனை ஒரு பார்வை பார்த்து விட்டு மரங்களுக்கு இடையே மறைந்தாள்.

குனிந்து மலரை எடுத்த அரசன் அதைத் தன் அதரங்களால் ஸ்பரிசித்து ஒரு பெருமூச்சு விட்டான். "சம்பகமே, காதலின் நறுமணம் போன்று இருக்கிறது உனது இனிய மணம் ஈசுவரேச்சையால் அக்காதலின் ஸாரமே ஒரு பெண்ணுருவாய் வந்ததுபோலுள்ள இம்மோகனப் பாவையின் மொழிகளும் அதற்கு ஏற்ற வாறே அமைந்திருக்கின்றன" என்று தனக்குள் கூறியவனாய் எல்லாவற்றையும் மறந்து சேடி மதுபமஞ்சரியின் மொழிகளையே தியானித்தவண்ணம் கோவிலுட் சென்றான். அவள் அழகானது, ஒரு சித்திரத்தை அழித்து வேறொன்று வரையும் கைதேர்ந்த ஓவியக்காரன்போல் வேதனைதரும் நினைவுகள் எல்லாவற்றையும் மன்னன் உள்ளத்தினின்றும் அழித்துவிட்டது.

## அத்தியாயம் 7

### தாமரை

தான் சருகுப்படுக்கையிற் படுத்து அரசன் இரவு முழுவதும் நன்றாய்த் தூங்கினான். அவன் கண் விழித்தபோது பொழுது விடிந்துவிட்டது. அவன் எழுந்து வெளியே வந்தபோது கையில் ஒரு செந்தாமரை மலருடன் சேடி குளப்படியில் காத்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். அன்று அவளைக் காண, தன் மனவமைதியே ஒரு பெண் வடிவம் கொண்டிருப்பதுபோல் அவனுக்குத் தோற்றியது. மன்னனை அருகிற் கண்டதும் அவள் நிமிர்ந்து, "என் தேவி இவ்வடியாள் மூலம் இம்மலரை அளித்து இரவு தாங்கள் சுகமாகத் தூங்கியெழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, இழந்த மனவமைதியை மீண்டும் பெற்றவன் நன்றாய்த் தூங்குவதற்கு என்ன? உன் தயையால் எவ்வளவோ காலமாய் இல்லாத ஓர் ஆழ்ந்த நித்திரை நேற்றிரவுதான் எனக்குக் கிட்டிற்று."

"அப்படியா? இத்தனை நாளும் இல்லாத இப்புதிய மனவமைதி இப்பொழுது எப்படி உண்டாயிற்று?"

அதற்குப் பதில் அரசன் சிரித்துக்கொண்டு, "தேர்ந்த வைத்தியன் ஒருவன் நேற்று ஒரு தூக்கமருந்து கொடுத்தான்" என்றான்.

"தேர்ந்த வைத்தியர்கள் கிடைப்பது அரிது. அப்படிப்பட்ட வைத்தியர்களைப் பெற்றிருப்பவர்கள் பாக்கியசாலிகளன்றோ?" என்றாள் சேடி.

"எனக்கு நித்திரை உண்டாக்கின மருந்து உன்னைத் தரிசிப்பதாகிய அமிருதத்தையும் உனது இனிய குரலோசையையும் சேர்த்துச் செய்யப்பட்டது. முன்பு நான் நிராசையாய் இருந்தேன். இப்பொழுது சொஸ்தமாகி விடுமென்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது."

அச்சொற்களைக் கேட்டு மதுபமஞ்சரி நகைத்து, "அரசே, ஜாக்கிரதை! இரண்டு தினங்களுக்கு முன்புதானே சஞ்சலகுணம் படைத்தவர்களென்று பெண்பாலார் அனைவரையும் தாங்கள் பழித்தீர்கள்? இப்பொழுது தாங்களும் இவ்வசை மொழிக்கு உரியவராகவில்லையா?" என, "துஷ்டச் சேடியே, என்னை வருத்துவதற்கென்றே நீ இவ்வாறு பொய்யெல்லாம் கூறுகிறாயென்பது உனக்கே தெரியும்" என்றான் அரசன்.

"தங்களைப் பார்க்கும்பொழுது, முன் ஒரு காலத்தில் மீன் பிடித்து ஜீவித்துவந்த ஒரு செம்படவனுடைய கதை எனக்கு ஞாபகம் வருகிறது. ஒருநாள் அவன் கடலில் மீன் பிடிக்கும் பொழுது அழகிய பொன்மீன் ஒன்று அவன் வலையிற் சிக்கிற்று. அவன் வெகு களிப்புடன்

வலையைக் கரைக்கு இழுத்து அம்மீனைக் கையில் எடுக்கும் சமயம் அது நழுவி மீண்டும் கடலுக்குள் குதித்துவிட்டது. அதற்காக அவன் கண்ணீர் விட்டு அழுது உயிரிலேயே பற்றற்றவனாய், 'அந்தோ! அம்மீனை இழந்த பிறகு இப்பொழும் ஜன்மம் எதற்கு?' என்று நொந்துகொண்டான். சிறிது நேரம் கழித்து அவன் மீண்டும் வலையைக் கடலில் வீசியெறிந்தான். அம்முறை வெள்ளி மீன் ஒன்று அகப்பட்டது. உடனே அவன் அப் பொன்மீனை முற்றும் மறந்து அவ்வெள்ளி மீனை எடுக்கப் போகும்பொழுது அதுவும் நழுவிக் கடலினுட் சென்றுவிட்டது. அவன் வலையை விட்டு எறிந்து வெகுநேரம் துக்கித்தவண்ணம் இருந்தான். பிறகு ஒருவாறு தேறி மறுபடியும் வலையை வீச, அச்சமயம் ஒரு சாதாரண மீன் மட்டுமே அதில் சிக்கிற்று. அதை அவன் எடுத்துப்போய்ப் பொன்மீன் வெள்ளிமீன் எல்லாவற்றையும் அடியோடு மறந்து சந்தோஷமாயிருந்தான்."

இக்கதையைக் கேட்ட அரசன், "பிரிய சேடியே, அவ்வற்பச் செம்படவனுடன் என்னை ஒப்பிட்டுக் கூறிய உனது குறும்புத்தனத்திற்காக நான் இப்பொழுது உன்னைக் கோபித்துக்கொண்டால் என்ன?' என்றான்.

"அரசே! ஜாக்கிரதை! உபமானம் முற்றும் பொருத்தமாகிவிடப் போகிறது" என்று சேடி சொல்ல, "அநேகமாய் அணைந்துபோன அக்

கினியுடன் வேண்டுமாகுல் நீ என்னை ஒப்பிட லாம். சாதாரண விறகுகள் பயன்படாமல் மலய மலையிலுள்ள சந்தனக்கட்டைகளைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்த திவ்வியமான தொரு சந்தன விறகை இட்ட பிறகே, என்றும் இல்லாத பிரகாசத்துடன் ஜ்வலித்துக்கொண்டு சாம்பற் குவியலினின்றும் அவ்வக்கினி கிளம் பிற்று" என்முன் அரசன்.

'அரசே, நேரமாகிறது. நான் போக வேண்டும்" என்று கூறிச் சேடி கையில் இருந்த தாமரை மலரைக் கீழே வைத்துவிட்டுத் திரும் பிச் சென்றவள் கண்ணுக்கு மறையுமுன் மன் னனை ஒரு முறை மறுபடியும் நோக்கிவிட்டு மரங்களுக்கு இடையில் மறைந்தாள்.

அரசனும் கீழே கிடந்த மலரை எடுத்து, "பங்கஜமே, என்னை அக்கினியாகவும் அவளைச் சந்தன விறகாகவும் நான் கூறியது சரிதானு? அவளை அக்கினியாகவும் என்னை அதற்கு இரை யாகவும் ஏன் கூறலாகாது? அவள் என்முன் இருப்பதைக் காட்டிலும் இல்லாதிருக்கும்போது இன்னும் அதிகமாகவே ஓர் அக்கினி ஜ்வாலை போல என்னைக் கொளுத்துகிருள். செந் தாமரையே, அவள் மேனியின் அழகை நீ சிறிது பெற்றிருக்கிருய். ஆதலின் அவளைக் காணுததால் ஏற்படும் இப்பகலின் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சியை உண்டாக்குவதன் பொருட்டு உன்னைக் கூடவே வைத்திருப்பேன்"

என்று கூறி, சென்றவைகளை மறந்து எதிர் காலத்தைப்பற்றி எண்ணமிட்டவனாய் மலருடன் கோவிலுட் சென்றான்.

## அத்தியாயம் 8

## ஸ்ரீபலம்

இரவு முழுதும் மதுபமஞ்சரியைப்பற்றியே கனவு கண்டுகொண்டிருந்த அரசன் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்து வெளியே சென்றான். இரவில் ஒன்றையொன்று பிரிந்திருந்த சக்கரவாகப் புட்கள் காலையில் ஒன்று சேர்ந்ததும் ஆனந்தக் கூச்சலிடுதலை அவன் நின்று கவனிக்கும்போது, சேடியும் கையில் சில ஸ்ரீபலங்களுடன் அவனை அணுகினாள்.

"என் தலைவி இவ்வடியாள் மூலம் இப்பழங்களை அளித்துத் தங்களது செளக்கியத்தை அறிந்து வரும்படி அனுப்பினாள்" என்று கூற, அரசன், "சேடியே, நேற்றிரவு நான் தூங்கினேனா அல்லது விழித்துக்கொண்டிருந்தேனா என்று என்னால் கூறமுடியாது. இரவு முழுவதும் உன் மொழிகளைக் கேட்டுக்கொண்டு உன்னையே நோக்கிய வண்ணம் இருந்தேன் என்பதுமட்டும் எனக்குத் தெரியும். ஆனால் அது கனவா நினைவா என்பதும் எனக்குத் தெரியாது" என்றான்.

அதற்குப் பதில் சேடி குறும்புத்தனம் கொண்ட ஒருவிதப் பார்வையுடன், "ஐயோ!

வைத்தியனைக் கேட்டால் வியாதிக்கு இவை மிகவும் கெட்ட லக்ஷணங்கள் என்றல்லவா கூறுவான்? இது சரியன்று. கல்லைக் கண்டு மோகித்த பைத்தியக்காரன்போல் இருக்கிறது தங்கள் நிலைமை" என, மன்னன், "அழகிய பெண்ணே, உனக்கும் கல்லிற்கும் ஒருவித ஸாம்யமும் எனக்குத் தோற்றவில்லை" என்றான்.

"அக்கல்லைக் கண்டு அப்பைத்தியக்காரனுக்கு எவ்வளவு மோகம் இருந்ததோ அவ்வளவுதான் தங்களுக்கும் என்மீது இருக்கக் கூடும்" என்றாள் அவள்.

"எனக்கும் அவனுக்கும் உள்ள ஸாம்யம் எப்படியாயினும் போகிறது. நீ அக்கதையைச் சொல். என் செவிகளும் கண்களும் இன்பம் அடையட்டும்"

"முன் ஒரு காலத்தில் வனத்திற்கு வேட்டையாடச் சென்ற அரசன் ஒருவன் ஓர் ஆலயத்தை அடைந்தான். அங்கே சுவரில் பதித்திருந்த லக்ஷ்மியின் சிலை ஒன்று தென்பட்டது. அதைப் புறக்கணித்து அப்பாற் செல்லச் சக்தியற்றவனானான். பிறகு தன் ஆட்களைக்கொண்டு சுவரில் இருந்த அச்சிலையைப் பெயர்க்கச்செய்து அரண்மனையில் ஓர் அறையில் கொண்டுபோய் வைத்தான். அதை விட்டு அகலாமல் நாள் முழுவதும் அதையே நோக்கியவண்ணமாய் இருப்பான். அவன் அதைக் கட்டியணைத்து முத்தமிடுவதுகூட உண்டு. பதிலுக்கு ஒன்றும் செய்யாமல்

அது மௌனமாய் இருப்பதைக் கண்டு குறை கூறுவான். ஒரு நாள் இரவு தூங்குங்கால் லக்ஷ்மீ தேவி கல்லினின்றும் உயிர்பெற்று எழுந்து தன்னிடம் வந்ததுபோல் அவனுக்குத் தோற்றியது. களிப்பினால் மெய்ம்மறந்து அவளை அவன் தன் கைகளால் சேர்த்து அணைக்கும் சமயம் தெருவில் காவலாள் ஒருவன் போட்ட சப்தத்தினால் விழித்துக்கொண்டான். சினம் மேலிட்ட அவன் உடனே அக்காவலாளைக் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டுத் தன் நகரத்திலுள்ள எல்லாக் காவலாட்களையுமே ஊரை விட்டுத் துரத்தி விட்டான். பிறகு ஆயுள் முழுவதும் அவ்விதக் கனவு மீண்டும் ஒரு முறை காண வேண்டுமென்று அவன் எவ்வளவோ முயன்றும் முடியாமற் போயிற்று. 'தேவியின் அருளால் நான் கனவில் கண்ட வடிவத்தின் தோற்றத்தை மட்டும் இச்சிலை பெற்றிருக்கிறதேயொழிய இதற்கு உயிர் இல்லை. அதுபோல் இவ்வுலகமும் பொய்மயமாகவே இருக்கிறது' என்று கருதியவனாய் எல்லாவற்றையும் துச்சமாய் நினைக்கலானான். கனவிலும் அடையமுடியாத ஒன்றைப் பெற ஆயுள் முழுவதும் ஒருவன் முயன்றால் உண்மையில் அவன் பைத்தியக்காரனே அல்லவா? நான் அச்சிலைக்குச் சமானமானவளே. தாங்கள் என் தலைவியை மறந்து தகாத ஒரு வஸ்துவின்மேல் இச்சை கொண்டால் தங்களையும் பைத்தியம் பிடித்த அம்மன்னனுக்கு ஒத்தவ

ராகத்தான் கூறவேண்டும். அரசே, என்ன, என்ன? நான் கூறியனவெல்லாம் உண்மை அல்லவா?" என்று அவள் கதையை முடித்ததும், அரசன், "என்னவோ, நான் கதையைக் கவனிக்க வில்லை. நீ கூறும்பொழுது உன் இதழ்களை நோக்குவதிலேயே ஊக்கமுடையவனாய் இருந்து விட்டேன். இதற்குமுன் நான் அவைகளைக் கவனிக்காதது விந்தையே. எங்கே, கதையை மறு படியும் சொல். அதைக் கேட்கவொட்டாமற் செய்யும் உன் அழகைப் பாராமல் என் கண்களை மூடிக்கொண்டு கேட்கிறேன்" என்றான்.

அதைக் கேட்டுச் சேடி நகைத்தாள். "ஐயோ! நான் கூறியது சரிதான். தங்களுக்குப் பைத்தியந்தான் பிடிக்கப்போகிறது' என்று கூறிக் கையில் இருந்த பழங்களைக் கீழே வைத்து விட்டுத் திரும்பிப் பாராமலே விரைந்து சென்றாள். அரசனே குனிந்து பழங்களைக் கையில் எடுத்து, "ஸ்ரீபலங்களே, ஆஹா! உங்களுக்குச் சரியான பெயர்தான் அமைந்திருக்கிறது. ஜன்மாந்தரத்தில் என்ன பாக்கியம் செய்தீர்களோ, அவள் கையால் பறித்துக்கொண்டு வரப்படு வதற்கு!" என்று கூறியவனாய், மதுபமஞ்சரியின் செவ்வதரங்களின் நிறத்தை ஒத்திருக்கும் அப்பழங்களை எடுத்துக்கொண்டு, மறுநாள் உதயத்தைப்பற்றிய எண்ணத்துடன் கோயிலினுட் சென்றான்.

## அத்தியாயம் 9

## சிரீஷ புஷ்பம்

அன்றிரவு முழுவதும் அவனுடைய ஆழ்ந்த நித்திரையில் மதுபமஞ்சரியின் நினைவே தாண்டவமாடியது. காலையில் பொழுது விடி வதற்குமுன் எழுந்து குளப்படியில் வந்து நின் றான். எண்ணிறந்த தாமரை மலர்கள் நிரம்பிய அப்பொய்கையை நோக்கும்பொழுது அவன் மனத்தில் சங்கை ஒன்று உதித்தது. 'ஆஹா! அவள் இவ்வாறு என் இருதயத்திற்பிரவேசிக்க நான் இடம் கொடுத்தது சரியா?' என்று எண் ணும்பொழுது, கையில் ஒரு சிரீஷ மலரை ஏந் தியவண்ணம் அவள் எதிரே வருவதைக் கண் டான். அவள் அவனை அணுகி, "இவ்வடியாள் மூலம் இம்மலரை அனுப்பித் தேவரீரது க்ஷேமத்தை அறிந்துவர என் தேவி விரும்பு கிறாள்" என, நிலவொளிபோல் அவள் இதழ் களில் அரும்பிய புன்னகையை அரசன் ஒரு நிமிஷம் நோக்கினான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டான். "பிரிய சேடியே, பயமும் சந்தேக மும் கொண்டவனுக்கு நல்ல தூக்கம் எப்படி உண்டாகும்? ஒருமுறை கப்பல் உடைந்து திண்

டாடிய நான் மீண்டும் இவ்வாழ்ந்த கடலில் பிரயாணம் செய்ய யத்தனிக்கிறேன். அலைகள் அழகாய் உருண்டு மடிந்து கரையில் மோத, வெகு சாந்தமாய்த்தான் விளங்கிற்று அந்நீலக் கடல்; அப்படி இருந்துதான் என்னை முன்பு அடி யோடு மோசம் செய்துவிட்டது. அவ்வாறு இருக்க, மீண்டும் அதில் என் சிறு படகை நான் தைரியமாய் எப்படிச் செலுத்துவேன்?" என்றான்.

சேடியானவள் மனத்தாங்கலும் வெறுப்பும் கலந்த பார்வையுடன் மன்னனை ஒரு நிமிஷம் நோக்கினாள். "அரசே, 'ஸம்சயாத்மா விநச்யதி' என்று சொல்லுவார்கள். தைரியமும் நம்பிக் கையும் இல்லாமல் எவன் ஒரு காரியத்தைச் செய்யப் பயப்படுகிறானோ அவன் ஒருகாலும் ஜயம் அடைய மாட்டான். கொடிய ஜந்துக்களும் அழகிய நாககன்னிகைகளும் வாசம்செய்யும் ஆழ்ந்த கடலினுள் அமிழ்ந்து கிடக்கும் பெறற் கரிய நிதிகள் அவனுக்குக் கிட்டா.

"முன் ஒரு காலத்தில் செட்டி குமாரன் ஒரு வன் தூரதேசம் ஒன்றில் வியாபாரம் செய்யும் பொருட்டுக் கடலில் பிரயாணமானான். அவன் வெகு தூரம் சென்று நடுக்கடலை அடைந்த பொழுது திடீரெனக் காற்று நின்று பாய்மரம் சாயவே, கப்பல் நின்றது. அச்சமயம் கடலி னின்றும் ஒரு பவழக்கொடி மேலே கிளம்ப, அக்கொடியின்மீது நாக கன்னிகை ஒருத்தி

உட்கார்ந்திருப்பதை அவன் கண்டான். அவளது அழகிய மார்பில் முத்துக்கள்போல் பிரகாசித்த கடல்நுரை அவள் உடம்பினின்றும் வழிந்து கடலில் சொட்டிக் கொண்டிருக்க, அவளுடைய நீண்ட கூந்தலானது அவிழ்ந்து அலைகளின்மீது புரண்டுகொண்டிருந்தது. 'கடலுள் குதித்து என்னுடன் வந்துவிடு. வியாபாரிகள் கனவிலும் கண்டறியாத சிறந்த ரத்தினங்களை உனக்கு அளிக்கிறேன் மானிடர்கள் பெறற்கரிய இன்பங்கள் தெவிட்டிப் போகுமளவும் நீ அநுபவிக்கும்படி செய்வேன்' என்று அவள் செட்டி குமாரனை அழைத்தாள். ஆனால் அவ்வழகியைப் பெற ஆவல் ஒருபுறமும் கடலைக்கண்டு பயம் மற்றொரு புறமும் பயங்கொள்ளியான அச்செட்டி மகனின் உள்ளத்தை வாட்டின. அவள் கூறியபடி கடலுட் குதித்துவிட அவன் மனம் துணியவில்லை. இப்படி இருக்கையில், திடீரென்று அப்பவழக் கொடி அவ்வழகிய நாக கன்னிகையுடன் ஜலத்தினுள் அமிழ்ந்து மறைந்து போயிற்று. இவ்வதிசயத்தைப் பார்த்திருந்த செட்டிமகன் மிகுந்த வருத்தத்துடன் கப்பலைச் செலுத்தினான். அவன் சிறிது தூரம் செல்வதற்குள் ஒரு கடும் புயல் கிளம்பி அடிக்க, கப்பலுடன் கடலுள் மூழ்கி இறந்தான். இப்படி அவன் தனக்குக் கிட்டவிருந்த எல்லாச் செல்வங்களையும் இழந்தான். ஆயினும் தான் எதற்குப் பயந்தானே அவ்வாபத்தினின்றும் தன் உயிரைக் காத்துக்கொள்ளவும்

அவனால் இயலாமற் போயிற்றல்லவா? அரசே, இவ்வாழ்வோ மிகவும் அநித்தியமானது. கடலின் அலைகளைக்காட்டிலும் ஸ்திரமற்றது. வாழ்நாளில் எப்பொழுதோ ஒருதரம் அதிருஷ்டவசமாய்க் கிடைக்க இருப்பதை அடைவதா, இழப்பதா என்று தீரனாயுள்ளவன் யோசிப்பானா? அப்படி ஒரு நிமிஷமேனும் யோசிப்பதற்குத்தான் இவ் வாழ்வில் என்ன இருக்கிறது?'' என்றாள்.

இவ்வாறு கூறிவிட்டு, அவள் தன் கையில் இருந்த சிரிஷமலரை அரசன் காலடியில் வைத்து விட்டு மெதுவாய்த் திரும்பிச் சென்று மரங்களுக்கிடையே மறைந்தாள். அரசன் குனிந்து கீழே கிடந்த மலரை எடுத்து, துரதிருஷ்டம் பிடித்த சிரீஷ புஷ்பமே, உன்னாற் சந்தோஷம் இல்லை. என் கெட்ட சந்தேக புத்தியில் என் அன்பார்ந்த சேடியின் வெறுப்புக்கு ஆளானேன் அல்லவா? ஆயினும், ஆஹா! கடைசியில் ஒரு பெண்ணாயிற்றே! மற்ற ஸ்திரீகளை விட்டுத் தனியாய் ஏன் கடவுள் அவளைச் சிருஷ்டித்திருக்கக் கூடாது? அப்பொழுது அவளையன்றி மற்றப் பெண்பாலார்க்கு இயற்கையாயுள்ள குறைகள் நினைவிற்கு வராமல் இருக்குமன்றோ?' என்று சிந்தித்துச் சேடியின்மீதுள்ள பாசம் முன்னிலும் அதிகமாக, தன்னையே கடிந்துகொண்டு மலருடன் ஆலயத்தினுட் சென்றான்.

## அத்தியாயம் 10

### கதம்பம்

சீருகுப் படுக்கையில் படுத்து இரவு முழுதும் தன் சந்தேகங்களினால் வருந்திக்கொண்டிருந்த அரசன், பொழுது புலருமுன் எழுந்து வெளியே சென்றான். அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இருள் மறைந்து வெகு விரைவாய்க் கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. ஆனால் வழக்கமாய் வரும் சேடியையட்டும் காணவில்லை. பொழுது ஏற ஏற அரசன் முகம் வாட்டம் அடைந்தது. 'என்ன? இன்னும் ஒருநாள் என்னைத் தனியே தவிக்கவிடும் உத்தேசமா?' என்று சிந்திக்கலானான்.

வெகு நேரமாயிற்று. ஆகாயத்தில் சூரியன் உக்கிரமாய்ப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டான். அச்சமயம் ஒரு கதம்ப மலரைக் கையில் ஏந்தியவண்ணம் சேடி மெதுவாய் வந்துகொண்டிருப்பதை அரசன் கண்டான். அவளைக் காணவே, சாந்தியே ஒரு பெண்ணுருவங் கொண்டு வந்திருப்பதுபோல் அவனுக்குத் தோற்றியது. அவள் அரசனை அணுகி, "என் தலைவி இவ்வடியாள் மூலம் இம்மலரை அளித்து

இரவில் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த செய்தியை அறிந்துவரும்படி கூறினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, செய்த பாபத்திற்கு மன்னிப்பை வேண்டும் ஒருவன் எவ்வாறு தூங்குவான்?" என்று அரசன் கூறினான்.

"அது என்ன?" என்று சேடி கேட்டாள்.

அதற்கு அரசன், "முன்பே என் சிறு படகு நடுக்கடலை அடைந்து மிதந்துகொண்டிருக்கிறது. ஜலத்தினுள் என்னைக் குதித்துவிடும்படி உத்தரவளிக்க அந்தப் பவழக்கொடியில் வீற்றிருந்த பெண்மணி ஒருத்திதான் தேவை" என்று கூறினான்.

ஆனந்தத்தால் சலிக்கும் கண்களுடன் சேடி அவனை நோக்கி, "அரசே, அப்படிப்பட்ட பெண்மணிகளை உலகில் காண்பது மிகவும் அரிது; அவர்களைத் தாங்கி நிற்கும் பவழக் கொடிகூட அவ்வளவு அரிதல்ல. தங்களுடைய இப்பிரயாணம் மிகவும் நிஷ்பலமென்றே நினைக்கிறேன். என் தலைவியைப்போன்ற சாதாரண ஒரு மானிட ஸ்திரீயைப் பெற்றுத் தாங்கள் திருப்தி அடையவேண்டியதுதான்" என்றாள்.

"உன் யஜமானியைப்பற்றி என்னிடம் கூறாதே. நான் கேட்கமாட்டேன்" என்று அவன் நடுவிலே சொன்னான். "அப்படி அன்று; அவள் எப்படி இருப்பாள் என்றாவது அறிய நிச்சயமாய்த் தங்களுக்கு ஆவல் இருக்கும். என்

தேவி என்னைவிட எவ்வளவோ அழகு வாய்ந்தவள்; நல்ல உயரம்" என்றாள் சேடி.

"உன்னைவிட உயரமென்றால், அப்பொழுது உயரம் மிகவும் அதிகமென்றே சொல்லவேண்டும்" என்றான் அரசன்.

"அவளுக்குக் கவிதா வன்மை உண்டு."

"படித்துப் பண்டிதைகளான பெண்களையே நான் விரும்புவதில்லை."

"தேவேந்திரனது சபையிலுள்ள அப்ஸரஸ்திரீயைப்போல் பாடவும் நடனம் புரியவும் என் தேவி அறிவாள்."

"என்னை நோக்கி நீ வரும்போது கேட்கும் உன் காலடிச் சப்தத்தைக்காட்டிலும் வேறு சிறந்த நடனம் எதுவும் எனக்கு வேண்டாம். வண்டுகளின் ரீங்காரத் துவனியைக்காட்டிலும் மதுரமாக இருக்கும் உன் குரலோசையே எனக்குப் போதும்" என்று அரசன் கூறும் பொழுது ஒரு வண்டு 'ரிங்' என்று பறந்துவந்து அவள் கையில் இருக்கும் மலருள் நுழைந்தது. உடனே சேடி விரைவாய் இதழ்களை மூடி, "அரசே, தங்களது பைத்தியத்தைச் சிகிச்சிப்பதன் பொருட்டு நான் இம்மலருக்குள் அவ்வண்டைச் சிறைப்படுத்திவிட்டேன். எங்கே, நிஜமான அவ் வண்டா அல்லது அதன் ரீங்காரத்துவனியுடன் ஒப்பிடும் என் குரலோசையா, இவற்றுள் எது அதிக இனிமையாய் இருக்கிறது? என்னை

வஞ்சிக்காமல் உண்மையைக் கூறுங்கள்? பார்க்கலாம்" என்றாள்.

மலரின் அருகிற் செவிசாய்த்துக் கேட்ட அரசன், "என்னால் கூற முடியவில்லை" என்றான். அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கி மீண்டும், "நீ இப்பொழுது பேசு; நான் கவனித்துக் கேட்டுக் கூறுகிறேன்" என, சேடி நகைத்துக் கையில் இருந்த மலரைக் கீழே வைக்கவும் அதனுள் இருந்த வண்டு 'ரிங்' என்று பறந்து வெளியே சென்றது.

"ஐயோ! அவ்வண்டுக்கல்லவா பைத்தியம் பிடித்திருக்கிறது? எனக்கல்ல. மலரனைய கரத்திலுள்ள பூவிற்குள் சிறைப்பிடிக்கப்பட்ட பிறகு, தாமே வெளியேற விரும்புவாரும் உண்டோ? எங்கே உன் கையைக் கொடு; மலருடன் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்" என்றான்.

"என் தேவி தங்களுக்கு அனுப்பியதால் மலர் தங்களுடையது. ஆனால் என் கை என்னுடையதல்லவா? நாழிகை ஆயிற்று; நான் போக வேண்டும்" என்று சேடி கூறும்பொழுது, வண்டானது எங்கிருந்தோ மீண்டும் வந்து அவள் தலையைச் சுற்றிப் பறந்தது. அவள் பயந்து, "அரசே, இத்துஷ்ட வண்டு என்னைக் கொட்டிவிடுமே!" என்றாள்.

"முன்பு சிறைப் பட்டதற்காக அது உன்னைப் பழிக்குப் பழி வாங்க வந்திருக்கலாம்" என்றான் அரசன்.

பயம் மேலிட்டு அவள் ஓடிவந்து அரசனைப் பிடித்துக்கொண்டு, "அரசே, தங்களை அடைக்கலமாக அடைந்தவளைக் காப்பாற்றும், காப்பாற்றும்!" என்றாள்.

ஆனந்த மிகுதியினால் அரசன், "பிரமர ராஜனே, நீ எனக்குச் செய்த உபகாரத்திற்குப் பதில், உனக்கு நாள் முழுவதும் அருந்தும்படி தாமரை இதழ்களில் தேனை ஊற்றி அளிப்பேன்" என்றான்.

இதற்குள் வண்டு அப்பால் பறந்து செல்ல, மதுபமஞ்சரி வெட்கமடைந்து அரசனை விட்டு விலகி, "என் தேவி மிகவும் தைரியசாலி. வண்டுகளைக் கண்டு பயப்படமாட்டாள்" என்றாள்.

"வண்டுகளைக் கண்டு பயப்படாத மங்கையர்கள் கெட்டார்கள்! உன் இதழ்களை மலரென அவ் வண்டு நம்பியது தவறாகுமா?"

"அரசே, மட்டுமரியாதையற்ற அவ்வண்டு தங்களெதிரில் என்னை மிகவும் இழிந்தவளாக்கி, ஒரு நங்கைக்குரிய அடக்கத்தை மறக்கும்படி செய்துவிட்டது. வெகு நேரமாகி விட்டது. நான் போகவேண்டும்" என்று கூறி மலரை அரசன் காலடியில் வைத்துவிட்டு விரைந்து திரும்பிப் பார்க்காமல் மரங்களுக்கு இடையிற் சென்று மறைந்தாள். குனிந்து மலரைக் கையில் எடுத்த அரசன், "ஏ, சிறந்த புஷ்பமே, நீ வாடியபிறகும் உன்னைப் பத்திரமாய் வைத்திருப்பேன். உன்னைக் கண்டு பறந்துவந்த அவ்

வண்டின்மீதுள்ள பயத்தினால் தன்னை மறந்து
என்னை என் பிரிய சேடி அணைத்ததற்கு நீயே
காரணம் அல்லவா? ஆஹா! சௌந்தரியமே, பல
மின்மையே உலக்குப் பெரிய சக்தியாக அமைந்
திருக்கிறதே! சீ! வண்டுகளைக் கண்டு அஞ்சாத
அரசகுமாரிகளால் என்ன பிரயோஜனம்?" என்று
கூறியவனாய்க் கதம்ப மலரை முத்தமிட்டுப்
பேரானந்தத்துடன் ஆலயத்தினுட் சென்றான்.

# அத்தியாயம் 11

## குரவகம்

இரவு முழுதும் சருகுப் படுக்கையில் படுத்துத் துயின்ற அரசன் காலையில் எழுந்து வெளியே சென்றான். குளத்தில் மின்மினிப் பூச்சிகள் உலகின் பெருஞ்சுடர் விளக்கான சூரியனின் வரவைக் கண்டு வெட்கமுற்றவை போல் ஓடி ஒளிவதை அவன் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது சேடியானவள் கையில் குரவக புஷ்பம் ஒன்றை ஏந்தியவளாய்த் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். முதல் நாள் நிகழ்ந்த சம்பவத்தை எண்ணும்பொழுது நாணத்தினால் முகம் சிவக்க, அச்சமே ஒரு பெண்ணுருக்கொண்டு வந்தது போல் அவள் விளங்கினாள்.

அரசனை அவள் அணுகி, "அரசே, என் தேவி இம்மரத்தை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கியெழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி என்னை அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, தன்னை அண்டினவர்க்கு வேண்டிய உதவியைச் செய்யவில்லையே என்று வருந்தாதவனன்றோ நன்றாய்த் தூங்குவான்?"

இம்மொழிகளைக் கேட்டுக் கண்களைப் பூமியிற் பதித்து நிற்கும் பெண்மணியை நோக்கி அரசன் அன்புடன் மீண்டும், "பிரிய சேடியே, நீ லஜ்ஜையுற வேண்டாம். அந்நிலைமையில் நீ வேறு என்ன செய்வாய்? நிர்க்கதியாயிருந்த உன்னிடம் நானும் தகாத விதமாய் நடந்து கொள்ளவில்லை. ஆயினும் அவ்வண்டானது என்னிடம் அகப்பட்டால், மிதமிஞ்சித் தேனைப் பருகி மதிமயங்கிப் பறக்க முடியாமற் கிடக்கும்படி செய்துவிடுவேன்" என்றான்.

"அவ்வண்டு என்னைக் கொட்டியிருந்தால்?" என்று சேடி கேட்டாள்.

"சிலந்திவலையினால் அதைப் பிணித்து யானையின்முன் எறிந்திருப்பேன்!" என்றான் அரசன்.

அதைக் கேட்டு அவள் சிரித்தாள்.

"ஐயோ பாவம்! அவ்வேழை வண்டு செய்த குற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா? அது போகட்டும். என் தேவியின் குறைநிசாரங்களைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன் கேளுங்கள்."

"அடி, வஞ்செனஞ்சக்காரி! உன் தலைவியின் பேச்சை நீ எடுக்காமல் இருக்கவே மாட்டாயா? ஐயோ! நான் ஏன் அரசனாய்ப் பிறந்தேன்! ராஜ்யத்தின் நன்மைக்காகவென்று இவ்வாறு எனக்கு விருப்பம் இல்லாமலிருந்தும் ஓர் அரசியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? சேடியே, நீ தலைவியாயிருந்து அவள் உன்

சேடியாக இருக்கலாகாதா? இப்பொழுது என்ன செய்வேன்!" என்று அரசன் ஏக்கத் [illegible] கூறச் [illegible]. "அரசே, இவ்வாறு ஏக்க [illegible]படுவதில் என்ன பயன்? கணேசரின் அருளினாலும் தங்களுடைய தீர்மானத்தினாலும் எவ்வளவோ பெரிய இடையூறுகளையெல்லாம் மனிதர்கள் வென்றுவிடுகிறார்கள். முற்காலத்தில் விசுவாமித்திரர் தமது முயற்சியினாலேயே பிரம்மரிஷியாகவில்லையா?" என்றாள்.

அரசன் ஒரு பெருமூச்சுடன், "பெண்ணே, நான் வருந்துவது ஈசனுக்குத் தெரியும். எனக்கு ஹிதமாக ஏதேனும் கூறுவதற்குப் பதிலாய்ப் பயனற்ற பழங்கதைகளைக் கூறி என்னைப் பரிகசிக்கிறாயே!" என்றான்.

சேடி கூறத் தொடங்கினாள்; "அரசே, சிலர் எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தபோதிலும் அவைகளை வென்று மேலே செல்லுகின்றனர். சிலர் ஒன்றும் இல்லாதபோதும் பயந்து உயிரை இழந்துவிடுகின்றனர். முன் ஒரு காலத்தில் ஒரு பௌர்ணமி இரவன்று பூர்ண சந்திரனானது குமுத மலரின்மேல் இச்சைகொண்டு ஒரு காட்டிலுள்ள தடாகத்தை ஆவலுடன் நோக்கியது. அத்தடாகத்தின் கரையோரமாய்ச் சேற்றில் அழகிய அல்லிமலர் ஒன்று மலர்ந்திருந்தது. ஆனால் அன்று இரண்டு ஆண் யானைகள் அங்கே வந்து சண்டையிட்டுக் கொம்புகளால் ஒன்றையொன்று குத்திக் கிழித்

துக்கொண்டதில் பெருகிய ரத்தமானது ஓடிக் குளத்திற் சென்று அவ்வல்லி மலரைச் செந்தாமரையாகச் செய்துவிட்டது. காதலியை ஆவலுடன் தேடிய சந்திரனே, 'அந்தோ! இது செந்தாமரையன்றோ? என் காதலுக்குரியதல்லவே!' என்று ஏங்கிப் பரிதபித்து அவ்வருத்தத்தினால் ஒவ்வோர் இரவும் வெளுத்துத் தேய்ந்து கொண்டே வந்து முடிவில் உருத்தெரியாமற் போய்விட்டது. அமாவாசைக்கு முந்திய இரவு ஆகாயத்தில் மேகங்கள் ஒன்றுகூடிச் சோவென்று வருஷிக்க, அம்மழை ஜலம் தடாகத்தில் விழுந்து ரத்தத்தினால் சிவந்திருந்த அல்லிமலரை அலம்பவே, அது முன்போலவே வெண்மையாக மாறிற்று. அமாவாசைக்குப் பிறகு இளம்பிறையானது ரகசியமாய்த் தடாகத்தை வந்து பார்க்க, தன்னைக் கண்டதால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரோவென்று ஐயுறும்படி இதழ்களில் மழைத்துளிகள் விளங்கும் மலரைக் கண்டது. அப்போது அதற்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை."

"ஆஹா! நான் அச்சந்திரனாகவும் அந்த அல்லி மலர் நீயாகவும் இருந்தால் பேரானந்தத்துடன் இரவு ஒரு நிமிஷமாகவன்றோ கழியும்! இப்பொழுது ஒவ்வோர் இரவும் ஒவ்வொரு யுகமாகச் செல்லுகின்றதே!" என்று அரசன் கூற, சேடி அதற்குப் பதில் சொல்லாமல் கையில் இருந்த மலரைக் கீழே வைத்துவிட்டு

வேகமாய் நடந்து மரங்களுக்கு இடையே மறைந்தாள். அரசன் குனிந்து மலரைக் கையில் எடுத்தான். "அழகிய புஷ்பமே, ஏதாவது பயன் உண்டு என்ருல் அந்த யானைகள் செய்தது போல் சந்தோஷத்துடன் என் ரத்தத்தைச் சிந்தி உன் இதழ்களைச் செந்நிறமாகச் செய்வேன். ஆயினும் அதுவும் முடியாது. உன் இதழ்கள் முன்பே ரத்தம்போல் சிவந்திருக்கின்றன" என்று கூறியவனுய்த் தனது சீலத்திற்கும் காதலுக்கும் ஏற்படப்போகும் போராட்டத்தை எண்ணி வருத்தமுற்ற உள்ளத்துடன் ஆலயத்தினுட் சென்ருன்.

## அத்தியாயம் 12

### அசோக மலர்

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் சருகுப் படுக்கையிற் படுத்துப் புரண்டுகொண்டிருந்த அரசன் பொழுது விடிந்ததும் எழுந்து வெளியே குளத்தருகில் வந்து நின்றான். அச்சமயம் அருணோதயம்போல் செந்நிறமாய் விளங்கும் மூக்குக்களையுடைய கிளிகள் அரசவிருட்சத்தின் கிளைகளில் உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் சேடியும் ஓர் அசோக மலரைக் கையில் ஏந்தியவளாய் எதிரே தோன்றினாள். அரசன் கண்களுக்கு அவள் பிரேமரஸமே ஒரு பெண் வடிவு கொண்டு வந்திருப்பதுபோல் விளங்கினாள். அவள் அரசனை அணுகி, "என் தலைவி அடியாள் மூலம் இம்மலரை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியைக் கேட்டு வரும்படி அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, பொழுது எப்போது விடியும் என்று காத்திருப்பவன் எவ்வாறு நன்றாய்த் தூங்குவான்? அந்தோ! எப்பொழுதுமே ஏன் சூரியோதயமாய் இருக்கலாகாது?

இதோ பார்: இக்காலைநேரத்தில் சூரியகிரணங்கள் பட்டு இந்தத் தாமரை மலர்கள் எவ்வாறு பொன்மயமாய் விளங்குகின்றன! நீயும் வந்திருக்கிறாய். பரமேசுவரன் இச்சூரியனைத் தன் சூலாயுதத்தால் குத்திக் கீழ்த்திசையிலேயே வானத்தில் எப்பொழுதும் ஸ்திரமாய்த் தோன்றும்படி செய்தால், இக் கமலமலர்கள் என்றும் பொன்மயமாய் விளங்கும்; நீயும் எப்பொழுதும் இங்கே இருப்பாய் அல்லவா?"

"அரசே, அசாத்தியமானவற்றை விரும்புபவர்கள் நன்மையை அடையமாட்டார்கள். முன் ஒரு காலத்தில் சூரியபகவானுடைய நெசவுக்காரர்களைக் காண விரும்பியவனுக்கும் அவ்வாறுதான் நேர்ந்தது:

"சூதாட்டத்தில் யாவற்றையும் இழந்து ஊரூராய்ச் சுற்றி அலைந்துகொண்டிருந்த சூதாடி ஒருவன் அகஸ்மாத்தாய்த் தூங்கிக்கொண்டிருக்கும் ஓர் அப்ஸரஸ்திரீயைக் கண்டான். அவன் அவளருகில் செல்வதற்குள் அவள் விழித்துக்கொண்டு ஆகாயத்திலே கிளம்பினாள். ஆனால் அதற்குள் அச்சூதாடி அவள் கால்களைப் பிடித்துக்கொள்ள, அச்சமயம் அவள் காலில் இருந்த தங்கச் சிலம்புகளில் ஒன்று அவன் கைகளிற் சிக்கிக்கொண்டது. அன்று இரவு இந்திரசபையில் தான் நடனம் புரியவேண்டுமென்றும் காலிற் சிலம்பு இல்லாமல் அங்கே போவது முடியாதாகையால் அதைக் கொடுத்துவிடும்படியும் அவள்

அவனைப் பலவிதமாய்க் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். 'என்னையும் சொர்க்கத்திற்கு உன்னுடன் அழைத்துப் போய் நீ நடனம் புரிவதைப் பார்க்கும்படி செய்தால் சிலம்பைக் கொடுப்பேன்' என்று அவள் தர்க்கம் செய்தான். அவள் வேறு வழியில்லாமல் தன் காதில் உள்ள மலரில் அவனை மறைத்துத் தன்னுடன் சொர்க்கத்திற்குக் கொண்டு போனாள். அங்கே, சுவர்ணத்தாமரைகள் காற்றில் அசைந்தாடுவது போல் அப்ஸரஸ்திரீகள் பொன்மயமான ஆடைகள் அணிந்து நாட்டியமாடுவதை அவன் கண்டான். உடனே அவனுக்குப் பேராசை மேலிட்டு இப்பொன்மயமான ஆடைகள் அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தனவென்று அவள் காதில் ரகசியமாய் வினவினான். 'உதயகிரிக்கு அப்பால் வசிப்பவர்களான சூரியபகவானுடைய நெசவுக்காரர்களால் எங்களுக்கென்று இவை நெய்யப்படுகின்றன. ஒவ்வோர் இரவும் அவர்கள், பகல் இரவு என்பது இல்லாமல் எப்பொழுதும் உதயகாலமாகவே இருக்கும் மலையிலே எவர் கண்ணிலும் தென்படாமல் மறைந்திருக்கும் இந்திரநீலப் பொய்கையில் சூரியபகவான் ஸ்நானம் செய்தபிறகு, அவருடைய பழங் கிரணங்களாகிய மயிரை அவர் தலையினின்றும் சீவி எடுத்துப் பொன்மயமாகச் செய்கிறார்கள்' என்று அவள் பதில் உரைக்க, அதைக் கேட்ட சூதாடிக்கு மேன்மேலும் பேராசை அதிகரித்து,

'ஆஹா, தங்கமா! எங்கே அந்த நெசவுக்காரர்கள்?' என்று ஆர்ப்பரிக்கத் தொடங்கினன். இக்கூச்சல் காதில் பட்ட தேவேந்திரன், நடனம் செய்பவர்களுக்குத் தொந்தரவாய் யார் இவ் விதம் கூச்சலிடுகிறர்கள் என்று பார்க்கும்படி ஏவியதில் மலரில் மறைந்திருக்கும் சூதாடி என்று தெரியவந்தது. உடனே தேவேந்திரன் மாதலியை நோக்கி, 'இத்துஷ்டனையும் இவனைத் திருட்டுத்தனமாய் இவ்விடம் அழைத்துவந்த இப்பொல்லாத அப்ஸரஸையும் சொர்க்கத்தை விட்டு இந்த க்ஷணம் விரட்டு!' என்று சட்டனை இட்டான். மாதலி அவ்விதமே செய்தான். சூதாடி மேலிருந்து பூமியில் விழுந்ததில் மண்டை சிதறிப்போய் மாண்டான்.

'ஆகவே, அரசே, ஜாக்கிரதை! கிடைக்கக் கூடாதவற்றை விரும்புவதனுல் தங்களுக்குக் கிடைத்ததும் போய்விடப் போகிறது" என்று கூறிச் சேடியானவள் தன் கையில் இருந்த அசோகமலரை அரசன் காலடியில் வைத்து விட்டுப் போவதற்குத் திரும்பினுள். அப்பொழுது, "பிரிய சேடியே, இன்னும் சிறிது நேரம் இருக்கலாகாதா?" என்று அரசன் கேட்டுக்கொண்டான். அவள், "முடியாது" என்று கூற, "அப்படியாயின் ஒருநாளில் இரண்டு மூன்று தடவையாவது இங்கே வந்தால் என்ன? பொழுது வளர்ந்துகொண்டே இருக்கிறது. நீயோ வருவதற்குமுன் போய்விடுகிருய். ஒரு

பகலுக்கும் மற்றொரு பகலுக்கும் நடுவில் ஒரு நீண்ட இரவு வேறு இருக்கின்றது" என்றான் அரசன்.

"அரசே, கிட்டாதவற்றின்மேல் இச்சை கொள்ளவேண்டாம். என் தலைவியுடன் அன்றோ நான் இருக்கவேண்டும்? எனக்கு வேலை இருக்கிறது" என்று கூறிச் சேடியானவள் தலைமறையு மளவும் திரும்பித் திரும்பி அரசனைப் பார்த்துக் கொண்டே அவ்விடம் விட்டுச் சென்றாள்.

அரசன் குனிந்து மலரை எடுத்து, 'அசோகமே' அப் பொல்லாத சேடியைப் போலவே நீயும் என்னை வருத்துகிறாய். உன் அழகைப் பார்க்கும்பொழுது உன்னை அப்பால் எறிந்து விடவும் மனமில்லை. ஆயினும் அவளை நான் காணும்படி செய்த அவள் தலைவியாகிய ராஜ குமாரியின் விஷயத்தில் எனக்குள்ள கடமையை நீ எனக்கு நினைவூட்டியவண்ணமாகவும் இருக்கிறாய்' என்று எண்ணமிட்டவனாய் ஆலயத்தினுட் சென்றான்.

## அத்தியாயம் 13

### பலாச புஷ்பம்

இரவு முழுதும் படுக்கையிற் படுத்துப் புரண்டுகொண்டிருந்த அரசன் காலையில் சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்து சிந்தையில் ஆழ்ந்த வண்ணம் குளப்படியில் வந்து நின்ருன். கையில் ஒரு சிவந்த பலாசபுஷ்பத்துடன் சேடி வந்து சேர்ந்தாள். ஆனல் பக்கத்தில் வந்து நிற்கும் வரை அவள் வரவை அரசன் அறியவில்லை. "அரசே, என் தலைவி இம்மலரை அடியாள் மூலம் தங்களுக்கு அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியை அறிந்துவரும்படி அனுப்பினுள்" என்று அவள் கூற, "பிரிய சேடியே, நீ தினமும் என்னிடம் வருவதைக் கண்டு பொருமையுற்ற ஒரு சக்களத்திபோல் நித்திராதேவியானவள் கோபித்துக் கொண்டு என்னை அணுகேன் என்கிருள்" என்ருன் அரசன்.

"அரசே, அவள் கோபிக்கவேண்டாம். நான் வருவது சீக்கிரத்தில் நின்றுவிடும்" என்று சேடி புன்னகையுடன் கூறினுள்.

"ஐயோ! அப்படிச் சொல்லாதே. நான் எதைக் குறித்துப் பயமுறுகின்றேனே அதையே

நீ கூறிவிட்டாய். இனியும் தாமதிப்பது நன்றுயிராதாகையால் வேறு விதியில்லாமல் கூடிய சீக்கிரத்தில் நான் உங்கள் அரசியை மணம் புரிந்துதான் ஆகவேண்டும். அந்தோ! அப்புறம் நீயும் நானும் போகும் வழி என்ன? நீ வருவதை நிறுத்தி விடுவாய். உங்கள் அரசிக்கு என்மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் உன்னை ஒருவேளை சிரச்சேதம் செய்துவிடும்படியாகக் கட்டளை இட்டாலும் இட்டுவிடுவாள்'' என்றான் அரசன்.

"இல்லை, இல்லை. எங்கள் அரசி தங்களுக்கும் எனக்கும் ஒருபோதும் தீங்கு நினைக்கமாட்டாள். தாங்கள் அவளைப் பார்த்துவிட்டால் தங்களது மனம் முற்றும் வேறுவிதமாக மாறிவிடும் என்று தான் பயப்படுகிறேன். அரசியைப் பார்த்த மாத்திரத்தில் சேடியை மறந்து விடக்கூடும் அல்லவா?''

"அதோ அச் சூரிய பகவான் சாக்ஷியாக அது ஒருகாலும் இல்லை'' என்று அரசன் ஆர்வத்துடன் கூறி, "அவளைத் திருப்பி அனுப்பிவிடுவேன். அவள் தந்தை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். என் ராஜ்யத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். நான் கவலைப்படவில்லை. இக்குளத்தருகில் தினமும் காலையில் உன்னைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டும்படி செய்தால் போதும்'' என்றான்.

சேடி மன்னனை நோக்கி ஒரு புன்னகை புரிந்து, "அரசே, இவையெல்லாம் அர்த்தமில்

லாப் பேச்சுக்கள். தாங்கள் ஒருகாலும் அவளைத் திருப்பி அனுப்பமாட்டீர்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும்'' என, "நான் அனுப்பத்தான் போகிறேன் பார்'' என்றான் அரசன்.

"அப்படிச் செய்தால் தாங்கள் அவளை வஞ்சித்துத் தங்கள் வார்த்தையையும் இழந்தவராவீர்கள். நம்பிக்கைத் துரோகம் செய்வது பாபமல்லவா? சத்தியமன்றோ சிறந்தது? மேலும், அவள் தங்களிடம் ஒப்படைக்கப் பட்டவள் அல்லவா? முன் ஒரு காலத்தில் இருந்த ஒரு வியாபாரியின் கதையைக் கூறுகிறேன்; கேளுங்கள்: அவனிடம் கைக்குள் அடங்காதபடி அவ்வளவு பெரிதான விலையுயர்ந்த முத்து ஒன்று இருந்தது. சுவாதி நக்ஷத்திரத்தில் சந்திரிகையுள்ள இரவில் பால்போல் வெண்மையான கடல் நுரையானது ஒருங்கே திரண்டு முத்துச் சிப்பியில் ஒரு சிறந்த முத்தாகப் பரிணமித்ததோ என்று எண்ணும்படி அது பிரகாசித்தது. அதன் சிறப்பு எங்கும் பிரசித்தமாய் இருந்தது. ஒருசமயம் தேசாந்தரம் போகவேண்டியிருந்ததால் அவ்வியாபாரி தன் நண்பனை மற்றொரு வியாபாரியிடம் சென்று அம்முத்தைக்கொடுத்து, 'நான் திரும்பி வருமளவும் இதை உன்னிடம் ஒப்பித்துச் செல்லுகிறேன்' என்றான். 'ஆஹா! அப்படியே. நீ பயப்படாமல் போய் வா' என்று அவன் உறுதி கூறவும் வியாபாரி புறப்பட்டுச் சென்றான். அவன் சென்றவுடன் நண்பன்

முத்தைப் பூமியிற் புதைத்து வைத்தான் இதற்குள் அத்தேசத்து அரசன் அவனிடம் வந்து, "நான் மிகுந்த திரவியம் அளிக்கிறேன். உன்னிடம் இருக்கும் முத்தைக் கொடுத்துவிடு. இல்லாவிடின் உன்னிடமிருந்து பலாத்காரமாய் அதைப் பிடுங்கிக்கொண்டு விடுவேன்' என்றான்.

"'இன்னும் ஒருவாரம் நான் அதை வைத்துக்கொண்டிருக்கிறேன். அதுவரையிலும் பொறுத்துக்கொண்டிருக்கத் தாங்கள் எது கேட்டாலும் கொடுக்கின்றேன்' என்று வியாபாரி சொல்ல, 'நான் ஒரு வாரம் பேசாதிருக்கவேண்டுமானால் நீ ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும்' என்றான் அரசன்.

"வியாபாரி அதற்குச் சம்மதித்து அப்படியே செய்தான். ஒரு வாரத்திற்குப் பிறகு அரசன் மீண்டும் அவனிடம் வந்து முத்தைக் கொடுத்து விடும்படி கேட்க, வியாபாரி அம்முறையும் ஒரு கோடி ரூபாய் கொடுத்து மற்றொரு வாரம் பொறுத்திருக்கும்படி செய்தான். இவ்வாறாக அவன் செய்துவந்து முடிவில் தன் செல்வம் முழுவதையும் இழந்து தரித்திரன் ஆனான்.

"கடைசியில், 'இப்பொழுதாவது அம் முத்தைக் கொடுத்துவிடு' என்று அரசன் கேட்க, வியாபாரி, 'வேந்தே, தங்களுடைய ராணியர் அனைவரிலும் பன்மடங்கு எழில்வாய்ந்த ஒரு மகள் எனக்கு இருக்கிறாள். அவளைக் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பதில் எனக்கு இன்னும்

ஓர் ஏழு நாட்கள் தரவேண்டும்' என, அரசன் அதற்கு இசைந்து அப் பெண்ணைக் பெற்றுக் கொண்டான்.

"அவ்வேழு நாட்கள் சென்று அரசன் மீண்டும் வந்து கேட்க, வியாபாரி, 'என் உயிரைக் கொடுக்கிறேன். இன்னும் ஒரு வாரம் பொறுக்கவேண்டும். அவ்வாரத்தின் முடிவில் தாங்கள் முத்தைப் பெற்றுக்கொண்டு என் உயிரை வாங்கிவிடலாம்' என்றான். அரசன் சம்மதித்துச் சென்றான்.

"மூன்று நாட்களுக்குப் பிறகு முத்தின் சொந்தக்காரன் திரும்பிவந்து முத்தைக் கொடுக்கும்படி கேட்க, நண்பன், 'தெய்வாதீனமாய் நீ வந்து சேர்ந்தாய். இதோ உன் சொத்து. பெற்றுக்கொள்' என்று முத்தை அவனிடம் சேர்ப்பித்துவிட்டு அரசனிடம் சென்று, 'அரசே, முத்துக்குடையவன் வந்துவிட்டான். ஆகையால் அதை அவனிடம் திருப்பி அளித்துவிட்டேன். அதற்குப் பதில் நான் வந்திருக்கிறேன்' என்றான்.

"அரசன், அதனிலும் சிறந்த முத்து நீ இருக்கும்பொழுது அது எனக்கு எதற்கு? என் புத்திரியை நீ மணந்துகொள்வாயாக! நீ என் கையில் ஒப்பிக்கப்படும்பொழுது இருந்தது போலவே பரிசுத்தமான கன்னிகையாய் இருக்கும் உன் மகளையும் திரும்பப் பெற்றுக்கொள். என் ராஜ்யம், ராஜ்யகாரியங்கள் எல்லாம் இனி உன்னைச் சேர்ந்தவை' என்றான்.

இவ்வாறு கதையை முடித்துவிட்டுச் சேடி மலரைக் கீழே வைத்துவிட்டு அவ்விடத்தினின்று அகன்ருள். அப்படிப் போகும் அவளை அரசன் மறையுமட்டும் நோக்கிக்கொண்டு நின்ருன். பிறகு கீழே குனிந்து அதை எடுத்து, 'பலாச புஷ்பமே, என்னிடம் அளிக்கப்பட்ட வஸ்து அல்லவா நீ? ஆஹா! அவள் இல்லாமல் நான் என்ன செய்வேன்! அவளையும் அடைந்து என் வார்த்தையையும் இழக்காமல் இருப்பது எவ் வாறு?' என்று சிந்தித்தவனுய் ஆலயத்தினுட் சென்ருன். இச்சங்கடத்தினின்றும் மீளுவதற்கு அவன் என்ன யோசித்தும் ஒரு வழியும் தென் படவில்லை.

*

*

## அத்தியாயம் 14

### சமீ புஷ்பம்

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்த அரசன் பொழுது விடியு முன் எழுந்து வெளியே சென்றான். குளத்தில் வெள்ளி போல் பிரகாசிக்கும் மீன்கள் நீருக்கு மேலே வந்து தாமரைத் தண்டுகளைக் கடிப் பதைப் பார்த்துக்கொண்டு நின்ற அரசன், கையில் மஞ்சள் நிறங்கொண்ட புஷ்பத்துடன் சேடி வருவதைக் கண்டான். உயிர்பெற்று நடந்து வரும் ஒரு புஷ்பக்கொடி போலவே அவள் விளங்கினாள். அவள் அரசனை அணுகி, "என் தேவி இம்மலரை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி என்னை அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே! அந்திமகாலம் நெருங்கி இருக்கும் ஒருவன் எவ்வாறு தூங்குவான்?" என்று அரசன் கேட்க, மதுபமஞ்சரி, "அரசே! தங்களுக்கு உயிரில் அவ்வளவு ஆசை ஏற்பட்டு விட்டதா? நேற்றுப் பிரதமையன்று வரையும் தங்களுக்கு இவ்வுயிர் மிகவும் துச்சமாகத் தோற்றவில்லையா?" என்றாள்.

"அப்பொழுது நான் உன்னைப் பார்க்க வில்லையே" என்று அரசன் கூறவே அவள் நகைத்தாள்.

"ஆயினும், அரசே, நான் ஒரு ஸ்திரீயா யிற்றே? ஸ்திரீகளைத் தாங்கள் பொருட்படுத்து வது உண்டா?"

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நீ ஸ்திரீயன்று என்பது மட்டும் எனக்குத் தெரியும். இல்லை, பெண்தான் என்றால், கடவுள் இரண்டு விதமான பெண்பாலாரைச் சிருஷ்டித்திருக்க வேண்டும். உலகிலுள்ள எல்லா ஸ்திரீகளையும் ஒருவிதமாகவும் உன்னைத் தனியாக ஒரு விதமாகவும் படைத்திருப்பார் என்று நினைக் கிறேன்."

இதைக் கேட்ட சேடி குறும்புத்தனமாய் அரசனை ஒரு பார்வை பார்த்தாள்; "இதில் எங்கள் அரசி எவ்வகையைச் சேர்ந்தவள்?" என்று கேட்டாள்.

"அடி சல்நெஞ்சக்காரி! நானே மறப்பதாக இல்லை. அப்படியிருந்தும் ஒரு க்ஷணங் கூட நான் தப்பித்தவறி மறந்துவிடாமல் இருக்கும்படி நீ எனக்கு அவளை ஞாபகமூட்டிக்கொண்டே இருக்கிறாயே" என்றான் அரசன்.

"அரசே! தாங்கள் செய்வது சரியன்று. என் தேவியை இவ்வாறு காக்க வைப்பது நியாயமா?"

இவ்வார்த்தைகளைக் கேட்டபொழுது சாட்டையால் அடிக்கப்பட்ட ஒரு ஜாதி அசுவம் போல் அரசன் துணுக்குற்றான்.

"சேடியே! இக்காலையில் எனக்குக் கிட்டியிருக்கும் அமிருதத்தை விஷமாக்காதே. நீ கூறுவது சரி. இவ்விஷயத்தில் நான் நடப்பது தவறென்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆயினும் இவைகளுக்கெல்லாம் உன்னைத்தான் குற்றம் கூறவேண்டும். உன் யஜமானியும் இக்குற்றத்தில் சேர்ந்தவள்தான். என்னிடம் அனுப்ப உன்னைத் தவிர அவளுக்கு வேறொருவரும் அகப்படவில்லையா? ஆயினும், அவள் மட்டும் அவ்விதம் அனுப்பினால் என் பிறவிப் பயனையன்றோ நான் இழந்தவனாவேன்! ஐயோ! அவள் எப்படிச் செய்தாலும் அது என் கேட்டிற்கே காரணமாகிறதே!"

"பின் வரப்போவது ஈசுவரனுக்குத்தான் தெரியும். ஆனால் என் அரசி விஷயத்தில் தாங்கள் வாக்களித்தபடி நடப்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது?" என்று சேடி கேட்டாள்; அரசன் ஒரு பெருமூச்செறிந்தான்.

"உன் மேனி சௌந்தரியம் பொருந்தியதுதான். ஆனால் உன் ஹிருதயம் எவ்வளவு கடினமானது! தேனினும் இனிய குரலானாலும் மொழிகள் என்னவோ வேம்புதான். நாளைப் பொழுது விடிந்ததும் என் பிரதிக்ஞைப்படி உன் அரசியை வந்து பார்த்துப் பிறகு ஜோதிஷர்க

ஞுடன் கலந்து விவாகத்திற்கு ஒரு முகூர்த் தத்தைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்லுகிறேன். இன்று மட்டும் உன்னை என் ஆசை தீருமளவும் பார்த்துப் பேசிவிடுகிறேன். சாயங்காலம்வரை இவ்விடமே என்னுடன் இரு. நாளைக் காலைக்கு வேண்டிய தெம்பு எனக்கு அப்பொழுதுதான் ஏற்படும்."

அவள் அவனைப் பரிவுடன் நோக்கிச் சொல்ல லானாள்: "அரசே! அன்று அவன் எழுதிய எழுத்தை ஒருவரும் அழிக்க முடியாது; ஒருவரால் மாற்றவும் இயலாது. முன் ஒரு காலத்தில் ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு அநேகம் தேவிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்திக்கு ஸ்ரீ என்று பெயர். பெயருக்குத் தகுந்தாற்போலன்றி அவள் அனைவரிலும் அழகு குறைந்தவளாய் இருந்தாள். ஆனால் அப்பெண் பரமசாதுவாகவும் சற்றும் தான் என்ற செருக்கு அற்றவளாகவும் இருந்ததனால் அரசன் அவள் மீது பிராணனாய் இருந்தான். அவள் தலையிலுள்ள ஒரு ரோமத்திற்குக்கூடத் தீங்கு வராமல் காக்க, அவன் தன் ராஜ்யம், உயிர், செல்வம் யாவற்றையும் இழக்கச் சித்தனாய் இருந்தான். ஒரு நாள், பெரிய குற்றம் செய்த குற்றவாளி ஒருவனைத் தூக்கிலிடும்படி அரசன் கட்டளையிட்டான். அவ்வாறே செய்த சற்று நேரத்திற்கெல்லாம் அரண்மனைப் புரோகிதர்கள் அவனிடம் வந்து 'மன்னர் பெருமானே! தேவரீர் கட்டளையினால்

சிரச்சேதம் செய்யப்பட்ட மனிதன் ஒரு பிராம் மணன். ஆகையால் தேவர்களுக்குத் தங்கள் மீது மிகுந்த கோபம் உண்டாகியிருக்கிறது. அவர் களுக்கு வேண்டிய பலியளித்துத் திருப்தி செய் யாவிடில் தங்கள் உயிர், ராஜ்யம் யாவற்றிற்கும் மிக்க ஹானி ஏற்பட்டுவிடும்' என்றனர். அரசன் அதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்க, 'தங்கள் அரசிகளில் யாரை அனைவரிலும் மேலாக நேசிக்கிறீர்களோ அவளைப் பலியாகக் கொடுக்கவேண்டும்' என்று அவர்கள் கூறினர். மன்னன் நடுங்கிப் போய், 'அனைவரிலும் மேலாக என்னை நேசிப்பவளும், என் அன்பை முற் றும் கொள்ளைகொண்டவளுமானவள் பிரியதரி சினி என்னும் அரசியேயாவள்' என்று பொய் சொன்னான். மறுநாட்காலை அவளைப் பலி கொடுத்துவிடுவதென்று தீர்மானித்து அவர்கள் சென்றனர். அவ்வாறே பொழுது விடிந்ததும், பலியிடும் யூபஸ்தம்பத்தைச் சுற்றி ஜனங்கள் திரளாகக் கூடினார்கள். அரசனும் அருகில் தன் ஆசனத்தில் வீற்றிருந்தான். பலியிடப் படுவதற்குச் சித்தமாய் மேனி முழுவதும் போர்த்தி அரசியைக் கொண்டு வந்தனர். கையில் கத்தியுடன் கொலையாளியும் காத்துக் கொண்டு நின்றான். மேலே போர்த்தியிருந்த துணியை எடுக்கவும் அவள் பிரியதரிசினியல்லா மல் ஸ்ரீயாக இருப்பதை அரசன் கண்டான். உடனே பகீரென்ற உள்ளத்துடன் இன்னது

செய்வதென்று தெரியாமல் ஆசனத்தினின்றும் குதித்தெழுந்து, 'ஐயோ! என் ஸ்ரீயா? கூடாது, கூடாது!' என்று கூவினான். கொலையாளி கையில் இருந்த கத்தியை ஓங்க, அது அவன் வஸ்திரத்தில் சிக்கிக்கொண்டு பூமியில் விழுந்தது. அதை உடனே எடுத்து அவன் மீண்டும் ஓங்கிக் குத்தப் போனான். ஆனால் அதே க்ஷணத்தில் அரசன் புலிபோல் தன் மனைவியின் முன் பாயவும், கத்தி அவன் ஹிருதயத்தில் ஊடுருவிச் சென்றது.

"மன்னனுக்கு இனியவளான ஸ்ரீயா எழுந்து சுற்றிலும் உள்ள ஜனங்களை ஒரு நிமிஷம் நோக்கினாள். பிறகு கீழே கிடந்த மன்னனது தேகத்தின்மீது விழுந்து அவனைப் பின் தொடர்ந்து மறு உலகம் சென்றாள். இக்காட்சியைக் கண்ட ஜனங்கள் அச்சத்தினால் ஒன்றும் சொல்லத் தோன்றாதவர்களாய் நின்றனர். 'ஓர் உயிருக்குப் பதில் இரண்டு உயிர்கள் பலியிடப் பட்டமையால் தேவர்கள் திருப்தி அடைந்து விட்டனர்' என்று புரோகிதர்கள் முடிவு கூறினார்கள்."

இவ்வாறு கதையை முடித்துச் சேடியானவள் தன் கையில் இருந்த மலரை அரசன் காலடியில் வைத்துவிட்டுப் போவதற்குத் திரும்பினாள். பரபரப்புடன் குரல் நடுங்க அரசன், "என்ன! அதற்குள் போய் விடுகிறாயா? உன் குரலையாவது கேட்டுக் கொண்டிருக்கும் வண்ணம், இன்னும் ஒரு கதைதான் சொல்லேன்,

இல்லையென்றால், வேண்டாம். நீ அப்படியே நின்றால் போதும்; உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அவ்வாறே உனது இப்பரந்த நெற்றியும், இளநகையும், கறுத்து அகன்ற கண்களின் ஒளியும் என் உள்ளத்தில் ஊடுருவிப் பதிந்து நீ சென்ற பிறகு நான் சோகமுறா வண்ணம் காக்கட்டும்'' என்றான்.

மதுபமஞ்சரி திரும்பி அப்படியே நின்றாள். ஒரு நிமிஷம் பொறுத்துத் திடீரென்று அரசனை அணுகி அவன் கையைப் பற்றி, "அரசே, நான் போகவேண்டுமே! நாழிகையாய்விட்டது. ஆனால் ஒருவேளை என் தலைவி மீண்டும் என்னை இங்கே அனுப்பினாலும் அனுப்பலாம். நானாக்காக இன்று சில காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன'' என்று ஒரு புன்னகையுடன் அவனை நோக்கிக் கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து விரைந்து சென்றாள்.

அவ்வாறு செல்லும் அவளை மன்னன் அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு குனிந்து கீழே கிடந்த புஷ்பத்தை எடுத்து, "சமீ புஷ்பமே! என்னைப்போல் உன்னுள்ளும் அக்கினி குடிகொண்டிருக்கிறது. உன்னை எனதடியில் வைத்துச் சென்ற இப் பெண்மணி, அரசவிருட்சத்திற்கு நீ எப்படியோ அது போன்றவளேயாவள் எனக்கு. உன்னைப் போலவே, குபீரென்று பற்றிக்கொள்ளுவதற்கு அவள் கை என்மீது பட்டாற் போதும். இக்

குளக்கரையிலேயே அவளுக்காகக் காத்திருப்பேன். அவள் மட்டும் வராமற் போனால் நாளைப் பொழுது விடிவதைப் பார்க்க நான் உயிருடன் இருக்கமாட்டேன் என்பது திண்ணம்'' என்று கூறினான்.

இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்த அரசன் ஆத்திரம் மேலிட்டவனாய் அக்குளக்கரையை விட்டு அப்பாற் செல்லாமல் சற்று உட்காருவான்; சற்று எழுந்து நிற்பான். அவன் கண்களோ சேடி வரும் வழியையே நோக்கிய வண்ணம் இருந்தன. பொழுது வளர்ந்து கொண்டேயிருக்க, கதிரவனும் வானத்தில் உக்கிரமாய்க் கிளம்பிவிட்டான். உச்சிவேளை நெருங்கவும், நிச்சலமான ஜலத்தில் தாமரைகள் வெள்ளிமலர்கள்போல் பிரகாசித்தன. மீன்களும் நீரில் சலனமில்லாமல் இருந்தன. மரங்களின் கிளைகளில் பக்ஷிகளின் அரவம் அடங்கியிருக்க, வண்டுகள் களைத்து மலர்களிலும் மயங்கிக் கிடந்தன. விருட்சங்களில் ஓர் இலைகூட அசையவில்லை. அவ்வனம் முழுவதுமே நித்திரையில் ஆழ்ந்திருப்பதுபோல் நிச்சப்தம் குடிகொண்டு விளங்கிற்று.

திடீரென்று அடர்ந்த விருட்சங்களுக்கு இடையே மதுபமஞ்சரி நடந்து வருவதை அரசன் கண்ணுற்றான். சித்திரம் போல் ஒரு நிமிஷம் அவள் அசைவற்று நின்றாள். ஆனந்த மிகுதியினால் மார்பு படபடவென்று அடித்துக்

கொள்ள அவளை அப்படியே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் அரசன். ஒரு நிமிஷம் பொறுத்து அவள் மெதுவாய் நடந்து வந்து மன்னன் முன் நின்ருள். அவள் கையில் வழக்கமாய்க் கொண்டுவரும் புஷ்பம் இப்பொழுது காணப்படவில்லை. "ஐயனே! ஒரு தாமரைமலர் வேண்டுமென்று என் தேவி தங்களிடம் என்னை அனுப்பினுள்" என்ருள்.

இவ்வாறு கூறிவிட்டு அவள் பூமியில் பதிந்த கண்களுடன் நிற்க, அவளது பட்டுப் போன்ற கண் இமை மயிர்கள் அவள் கன்னங்களில் படிந்திருக்கின்ற அழகைக் கண்டு திகைத்த அரசன் பேச்சற்றவனுய் நின்ருன். அவன் பேச முயன்றும் ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை.

சுற்றிலும் நிச்சப்தம் குடிகொண்டிருந்த அவ்விடத்தில் அவ்விருவரும் இவ்வாறு பேச்சற்று மௌனமாய் நின்றிருந்தார்கள். கடைசியில் அரசன், "பிரிய சேடியே! நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஆனுல் கேட்பதற்குப் பயமாய் இருக்கிறது" என்ருன்.

"ஆஹா! அரசனுக்கும் பயமா?" என்று கூறிச் சேடி குறுநகையுடன் மன்னனை நோக்கினுள். ஆனுல் மறுகணமே அப்புன்னகை மறைந்து அவள் கண்கள் கீழே தாழ்ந்தன.

"சேடியே! உன்மீது நான் காதல் கொண்டிருக்கிறேனு இல்லையா என்பதைக் கூறு

வாடா?" என்று அரசன் கேட்க, அவள் முகம் சிவந்தது.

"வியாதியின் குறிகளை அறியாமல் வியாதி இன்னதென்பதை வைத்தியன் எப்படிக் கூறுவான்?" என்றாள் தோழி.

அரசன் அவளருகில் சென்று தன் கைகள் இரண்டையும் பின்புறம் கோத்தவண்ணம் நின்று அவளை நோக்கிக் கூறலானான்: "உன்மீது நான் காதல் கொண்டுள்ளேனா இல்லையா என்பது எனக்கே தெரியவில்லை. அதனால்தான் உன்னைக் கேட்கிறேன். முன்பு ஒரு தரம் காதல் கொண்டிருப்பதாக நினைத்தேன். ஆனால் இப்பொழுது ஏற்பட்டுள்ளது போன்ற உணர்ச்சி எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. அப்பொழுது காதலென்றால், இப்பொழுது அப்படியல்ல. இதுதான் காதல் எனின், அது காதல் அன்று எனக் கொள்ள வேண்டும். நீ என்னைப்போல் அல்ல; வெகு புத்தி சாலி. ஆகையால்தான் உன்னால் ஒருவேளை கூற முடியுமென்று நினைக்கிறேன். உன்னைக் காணும்பொழுது என் கண்கள் இருண்டு, என் தேகமுழுவதும் குபீரென்று அக்கினிபோன்ற ஓர் உணர்ச்சி பரவுகிறது. உன் குரலைக் கேட்கும்பொழுதோ, ஜிலீரென்று ஒரு பனிக் கட்டி என் மேனிமீது பட்டதுபோல் என் பிரக்ஞை தடுமாறுகிறது. இத்தகைய நிலைமை யினால், எனக்கு என்ன செய்வதென்று தெரிய

வில்லை. கண்களில் நீர் பெருகுகிறது. ஆனால் சிரித்துச் சந்தோஷப்படவேண்டும்போல் இருக்கிறது, மனத்திற்கு. பேச முயன்றாலோ குரல் நடுங்கி நெஞ்சை ஏதோ அடைத்துக்கொண்டு வாயில் வார்த்தைகள் வருவதில்லை. மூச்சுத் திணறுவது போன்ற சிரமம் தோன்றுகிறது. இன்னும் என்னவெல்லாமோ செய்கிறது. என்றால் சரியாய்க் கூற முடியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்வேன்: நீ இங்கே இருக்கும்வரையில்தான் என் பிராணன் நிற்கிறது. நீ போய்விட்டால் மரணத்துக்கு ஒப்பான வேதனைதான்.

இம்மொழிகளைக் கேட்டு மதுபமஞ்சரி ஒன்றும் பதில் கூறவில்லை. அவள் கீழ் உதடு நடுங்க, கண்களில் நீர்த்திவலை ஒன்று திரண்டு பிரகாசித்தது. மெதுவாய் மார்பு எழும்பி மடிந்து அவள் மனநிலையை நன்கு உணர்த்தியது. கடைசியாக அவள் நீர் நிறைந்த கண்களுடன் அரசனை ஏறிட்டு நோக்கி, "அரசே! நான் இவ்விடம் விட்டுச் செல்வது நலம். ஏனெனில் இம்மொழிகள் தேவியின் செவிகளுக்கு ஏற்றவையே யொழிய என் செவிகளுக்கல்ல" என்றாள்.

மன்னன் அதற்கு மறுமொழி கூறாமல் எழுந்து நின்றான். இப்புறமும் அப்புறமும் நோக்கிச் சிரித்துக்கொண்டே, "ஏது, நீ என்னை வெறிபிடிக்க அடித்துவிட்டாயென்று நினைக்கிறேன். இனி நான் ஒன்றையும் கவனிக்கப்

போவதில்லை. நான் ஒரு புருஷன்; பலிஷ்டன்! நீயோ ஸ்திரீ; அபலை. நீ என்னை விட்டுப் போகக்கூடாது. போனால் என் உயிரும் உன்னுடன்கூடச் சென்றுவிடும்'' என்றான். அதனுடன் நில்லாமல் திடீரென்று தன் இரு கைகளாலும் அவளைச் சேர்த்து இறுகப் பிடித்துக் கொண்டான். மதுபமஞ்சரியோ அவனது பிடியினின்றும் திமிற முயன்றவளாய்ச் சிரித்துக் கொண்டே, "ஆரிய புத்திரரே! என்னை விடுங்கள். நான்தான் ராஜகுமாரி என்பது தெரியவில்லையா?'' என்றாள்.

அச்சொற்களைக் கேட்டதும் அரசன் ஈட்டியால் குத்தப்பட்டவனைப்போல் திடுக்கிட்டுத் துள்ளியெழுந்தான். அவ்வாறு திகைத்து நிற்கும் அவனைப் பார்க்கும்பொழுது மதுபமஞ்சரிக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது. முதல்முதல் வியப்பும், பிறகு வெட்கமும், கடைசியாக எல்லையற்ற களிப்பும் அவளை நோக்கும்பொழுது அரசனுக்கு உண்டாயின. "நீ எவ்வளவு சிரித்தாலும் உன் சிரிப்பு என் செவிக்குச் சங்கீதம் போலத் தோன்றுமேயொழிய வேறல்ல. நீ இங்கு இருக்கும்வரை அதை நான் பொருட்படுத்தவே மாட்டேன். ஆயினும், அடி மாயக்காரி! இதென்ன? நீ அன்றோ என்னிடம், ராணியை வஞ்சிக்கலாகாதென்று கூறியவள்? அப்படியிருக்க இப்பொழுது நீ செய்திருப்பதென்ன?'' என்றான்.

உடனே மதுபமஞ்சரியின் சிரிப்பு ஓய்ந்து கண்களினின்றும் நீர் சொரிந்தது மன்னனைச் சற்றுப் புன்னகையுடன் நோக்கினாள். பிறகு கையைப் பிடித்து அவனை அழைத்துச் சென்று குளத்துப்படியில் உட்காரச்செய்தாள்.

"ஆரியபுத்திரரே! இப்படி உட்காருங்கள். நான் யாவற்றையும் கூறுகிறேன்" என்று சொல்லி அவன் அருகில் உட்கார்ந்து அவன் வலது கையை எடுத்துத் தன் தோள்மீது போட்டுக்கொண்டாள். பிறகு அவனது மற்றொரு கையைத் தன் கரத்தால் பற்றியவளாய்க் கூறலானாள்:

"என்னே தங்களது பேதைமை! ஒரு பெண் நிலையற்றவளாய் இருந்தால் உலகில் எல்லாப் பெண்களும் அவ்வாறே இருப்பார்களென்று நினைக்கலாமா? ஒரு பெண்ணின் துணையற்றுத் தங்களது வாழ்நாளைக் கழிப்பதென்று நினைத்தீர்களே! நடந்த சமாசாரத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள்: என் தந்தை என்னை விவாகம் செய்து கொள்ளும்படி தங்களுக்குச் செய்தி அனுப்பியபொழுது நானும் ஓர் ஆளை அனுப்பித் தங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து வரும்படி செய்தேன். அவன் தங்களது படத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். நான் தங்களைப் பார்க்காவிட்டாலும் வெகுநாட்களுக்கு முன்னிருந்தே காதலித்துவிட்டேன். தாங்களும் அப்படியே இருக்க வேண்டு

மென்று தீர்மானித்தவளாய், என்னை யாரென்று அறியாமலே தங்களை என்மீது காதல்கொள்ளும்படி செய்தேன். ஒரே ஒரு நாள் என் உறுதி குறைந்தது. அன்றுதான் நான் இங்கே வாராமல் இருந்தது. அன்று முழுவதும் கண்ணீர் பெருக்கியே கழித்தேன். தாங்கள் இது வரையிலும் அனுபவித்தறியாத வாழ்வின் இன்பத்தை நான் தங்களுக்குக் காட்டுகிறேன். தாங்கள் சந்தோஷமாயிருக்கும்பொழுது தங்கள் சந்தோஷத்தை இருமடங்காகச் செய்வேன். தாங்கள் துக்கமாயிருக்கும்பொழுது அதை ஒருவாறு அகற்றி முடிவில் இன்னும் ஆழ்ந்த சந்தோஷமாக மாற்றிவிடுவேன். தாங்கள் சௌக்கியமாய் இருக்கும்பொழுது பலவித விநோதங்களால் தங்கள் மனத்தை இன்புறச்செய்வேன். அசௌக்கியமாய் இருக்கும்பொழுதோ, தாய் போல் பாதுகாப்பேன். களைப்புற்றிருந்தால் தாங்கள் உறங்குவதற்கு என் மார்பே தலையணையாக இருக்கும் பணிவிடையிலேயே சதா நான் கண்ணுங் கருத்துமாக இருப்பேன். தங்களுக்கு வேண்டாதபோது மீண்டும் தாங்கள் கூப்பிடும் வரை அப்பால் சென்றிருப்பேன். தங்களுக்கு முன் நான் இறந்துவிட்டால் மிகவும் நல்லதாயிற்று. அப்படிக்கின்றித் தாங்கள் முன் சென்றால் நான் அக்கினிப்பிரவேசம் செய்து தங்களைப் பின் தொடருவேன். தங்களைவிட்டு ஒரு க்ஷணமும் என் உயிர் நில்லாது. எனக்கு உயிரும்

உருவமும் அளித்தவர் போய்விட்டால், பிறகு நான் கனவு, சந்திரிகை, நீரின் சாயை, நிழல் இவைபோல் வெறும் சூன்யமாக வேண்டியது தான் அல்லவா? ஏனெனில் நான் தங்களது பிரதிபிம்பமேயொழிய வேறல்ல. வசிஷ்டருக்கு அருந்ததிபோலவும், மன்மதனுக்கு ரதிபோலவும், கிருஷ்ணனுக்கு ராதைபோலவும் நான் தங்களுக்கு இருப்பதே என் தர்மமும் கடமையும் ஆகும். நானே தங்களது சக்தி; தங்களுக்குரிய க்ஷேத்திர பூமி; தங்களுடன் இரட்டையாய்ப் பிறந்தவள். தங்களது காதலென்னும் மந்தரமலையைக் கொண்டு க்ஷீரசமுத்திரத்தைப்போல் என்னைக் கடைந்தால் என்னுள்ளிருந்து அமிருதத்தைப் பெறுவீர்கள்.

"கற்பிற் சிறந்த மனையாள் லாவண்ய வாரியில் கடைந்தெடுத்த அமிருதத்திற்கு ஒப்பானவள், இன்பத்தின் ஊற்றுப் போன்றவள் என்பதைத் தங்களுக்குக் காட்டுவேன். என்னை அடைந்து தாங்கள் வாழ்வின் பயன் முற்றும் நுகர்ந்தவராவீர்கள். நான் இல்லாத வாழ்வு அர்த்தமற்ற வார்த்தைபோலவும், சந்திரனற்ற இருண்ட இரவுபோலவும் சூன்யமானதென்று அப்பொழுது அறிந்துகொள்ளுவீர்கள்."

மன்னன் அவள் முகத்தைத் தன் இரு கைகளாலும் பற்றி உற்று நோக்கினான். அவள் கூறியது முற்றும் உண்மையே என்று விளங்கிற்று. திடீரென்று அவளை விட்டு எழுந்து நின்றான். ஆனந்த மிகுதியினால் அவன் உள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது. மறுபடியும் அவள் அருகில் உட்கார்ந்து, "பிரிய சேடியே! நீ ஒன்றை மறந்துவிட்டாய். இக்குளத்தினின்றும்

உன் தேவிக்குக் கொண்டுபோய்க் கொடுக்க ஒரு தாமரை மலர் வேண்டாமா?" என்றான்.

மதுபமஞ்சரி களிப்புடன் கலகலவென்று நகைத்து, "அரசே! ஆம்! ஆம்! தாங்கள் கூறுவது சரியே" என்றாள். இருவரும் திரும்பிக் கரையோரம் சென்றனர். அரசன் அவளை நோக்கிச் சிறிது அச்சத்துடன் மனத்திற்குள், 'அவள் இன்னும் என்னைத் தானாக முத்தமிடவில்லையே!' என்று எண்ணமானான்.

கரையோரமாய் ஒரு தாமரை மலர்ந்திருப்பதை இருவரும் கண்டனர். "ஜலத்தில் நீ தவறி விழுந்துவிடாமல் இருக்கும்வண்ணம் நான் உன்னைத் தாங்கிக்கொள்ளுகிறேன். நீயே அத்தாமரையைப் பறித்துக்கொள்" என்று கூறி மன்னன் இரு கைகளாலும் அவளைச் சேர்த்துப் பிடித்துக்கொள்ள. இருவரும் நீரின் பக்கம் குனிந்தனர். மதுபமஞ்சரி மலரைப் பறிக்கக் கைநீட்டும்பொழுது அரசன் அவள் காதோடு, "இதோ பார்; ஒரு முகத்திற்குப் பதில் இரண்டு முகங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன் உன்னைக் கரையோரம் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்! எங்கே! நான் எதை முத்தமிடுவது? யார் என்னைப் பதிலுக்கு முத்தமிடுவார்கள்? சேடியா, அல்லது சேடியின் அரசியா? சொல் பார்ப்போம்" என்றான்.

மதுபமஞ்சரி மலரைப் பறித்துக்கொண்டு அரசன் பக்கம் திரும்பி, "இருவருந்தான்" என்றாள்.

முற்றும்.